# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 29 வெள்ளிக்கிழமை (13.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:107


## இலங்கை விவகாரத்தை விரைந்து

# பாதுகாப்புச் சபைக்கு கொண்டுசெல்ல

# அமெரிக்க காங்கிரஸ் வலியுறுத்து

## 38 உறுப்பினர்கள் ஹிலாரிக்கு அவசர கடிதம்

வாஷிங்ரன், மார்ச் 13

வன்னியில் ஏற்பட்டுள்ள பேரவலத்தைப் போக்கி, அங்குள்ள மக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இலங்கை விவகாரத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்வதற்கு அதன் உறுப்பு நாடுகளுக்கு அழுத்தம் கொடுங்கள்.

இவ்வாறு அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் 38 பேர் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுக்கு அனுப்பியுள்ள அவசர கடிதம் ஒன்றில் கேட்டுள்ளனர்.

வன்னிப் பகுதியில் சிக்குண்டுள்ள சகல மக்களுக்கும் பாதுகாப்பை வழங்குமாறும், மனிதாபிமான விநியோகங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகளை அனுமதிக்குமாறும் உடன் இலங்கை ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு கேட்குமாறும் அவர்கள் தமது கடிதத்தில் வலியுறுத்தி உள்ளனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு வைத்தியசாலை படையினர் வசம்

கொழும்பு, மார்ச் 13

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை நேற்றுக்காலை இராணுவத்தினரின் வசமானது எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

53ஆவது, 58ஆவது மற்றும் விசேட படையணி - 8 ஆகியன இணைந்து மேற்கொண்ட தாக்குதலின் பின்னரே வைத்தியசாலை இராணுவத்தினரின் கட்டுப்பாட் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களை மீட்கும் திட்டத்தை கைவிட்டது ஒபாமா நிர்வாகம்

கொழும்பு, மார்ச்13

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டத்தை ஒபாமா நிர்வாகம் கைவிட்டுள்ளது என வாஷிங்ரன் வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தியாவின் 'ரெடிவ் இந்தியா' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரு தரப்பும் பரஸ்பரம் தாக்குதலை நிறுத்தி, மக்களை வெளியேற்ற இணங்காத சூழ்நிலை காரணமாகவே இந்தத் திட்டம் கைவிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த இணையத்தளத் தில் மேலும் தெரிவிக்கப்படுள்ளவை வருமாறு:- (16 ஆம் பக்கம் பார்க்க)

## உடையார்கட்டில் புலிகளின் இரசாயன ஆயுத உபகரணங்கள் மீட்கப்பட்டதாக அரசதரப்பு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி பாரியளவிலான தாக்குதல் ஒன்றை நடத்தத் தயாராகி வருவதாக பாதுகாப்பு அமைச்சின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கட்டப் போர் நெருங்குவதால்

# முல்லையில் சிக்குண்டுள்ள மக்கள் பூண்டோடு அழியும் அபாயத்தைத் தவிர்க்க யாழ்.ஆயர் வேண்டுகோள்

## இரு தரப்பும் இணைந்து பாதுகாப்பான பகுதியை தெரிவு செய்ய வற்புறுத்து



யாழ்ப்பாணம், மார்ச்13

அரசாங்கப் படையினரும் விடுதலைப் புலிகளும் இறுதிக்கட்ட போரில் மோதுவதற்கு தயாராகிக் கொண்டு இருப்பதால் -

முல்லைத்தீவில் 7 மைல் நீளமான பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பூண்டோடு அழியும் பேராபத்தான சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆகையால் அவர்கள் கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பான இடம் ஒன்றில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

இவ்வாறு யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதிக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார். அந்த வேண்டுகோளின் பிரதி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மக்களை பாதுகாப்பான இடத்துக்குச் செல்வதற்கு உடனடியாக அனுமதிக்காவிடின் அங்குள்ள மக்கள் பூண்டோடு அழியும் அபாயம் உருவாகும் என்றும் அவர் தமது கடிதத்தில் இடித்துரைத்துள்ளார்.

யாழ்.ஆயரின் கடிதத்தின் பிரதிகள் ஏ.சி.என். எனப்படும் கிறிஸ்தவ உதவி நிறுவனம் உட்பட பல மத மற்றும் மனிதாபிமான பணி அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வன்னியில் இறுதிக்கட்டப் போர் தொடங்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன. அந்தக் கடும் போரில் மக்கள் சிக்குண்டு போவதைத் தவிர்க்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்-

இப்போது கடற்கரையோரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்துக்குள் மக்கள் சிக்கி வெளித் தொடர்புகளை இழந்து விடுவார்கள் என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது-

மக்கள் அங்கிருந்து உடனடியாக வெளி (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக்கு இரண்டாவது தடவையாகவும் கப்பலில் நேற்று உணவுப் பொருள்கள்

கொழும்பு, மார்ச்13

முல்லைத்தீவுக்கு முன்னர் உணவுப் பொருள்களைக் கொண்டு சென்ற 'வின்ரன்' கப்பலின் எஞ்சிய உணவுப் பொருள்களும் இறக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இக்கப்பல் 500 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களுடன் கொழும்பில் இருந்து புறப்பட்டு புதுமாத்தளனை அடைந்து பொருள்களை இறக்கும்போது இம்மாதம் 10 ஆம் திகதி புலிகள் ஷெல் தாக்குதல்கள் நடத்தியதால் 145 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களை இறக்கிய நிலையில் கப்பல் திருகோணமலைக்கு கொண்டு (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேறும் பொருட்டு போரை நிறுத்தக் கோருகிறது ஐரோப்பிய ஒன்றியம்

பிரஸல்ஸ், மார்ச் 13

இலங்கையின் வடக்கே மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கி பெரும் துயரங்களை எதிர்நோக்கி வரும் மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு வசதியாக உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்று ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களுக்காக வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களின் நிலைமை குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகள் குறித்து ஆராய ஐ.நா. பிரதிநிதி வருகிறார்

நியூயோர்க், மார்ச் 13

ஐக்கிய நாடுகளின் விசேடபிரதிநிதி பிலிப் அல்ஸ்டன் இலங்கையில் இடம் பெற்று வரும் படுகொலைகள் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து தாம் ஏற்கனவே அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும், அரசாங்கத்தின் சாதகமான பதிலுக்காக காத்திருப்பதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.


(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பகத்தன்மையுள்ள அதிகாரப் பகிர்வே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழி

## அமெரிக்காவில் சிவ்சங்கர் மேனன் வலியுறுத்து



வாஷிங்ரன், மார்ச் 13

இலங்கையில் ஏற்பட்டுள்ள தசாப்தகால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் தமிழர் வாழும் பகுதிகளுக்கு நம்பகத்தன்மை மிக்க அதிகாரப் பகிர்வை வழங்குவதே சிறந்தது.

- இவ்வாறு இந்திய வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் வாஷிங்ரனில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாடு இடம்பெறாவிட்டால் சிறுபான்மை சமூகங்கள் தனிமைப் படுத்தப்படும் அபாயம் மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

வாஷிங்ரனிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சிவ்சங்கர் மேனன் இலங்கையின் தற்போதைய மோதல் நிலை மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து அமெரிக்க இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகளுடன் உரையாடினார்.

இதன்பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே நம்பகத் தன்மை மிக்க அதிகாரப் பகிர்வின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவும் இந்தியாவும் ஒரேமாதிரியான அணுகு முறையைக் கொண்டுள்ளன எனவும்-

இராணுவ நடவடிக்கை மூலம் நிலங்கள் விடுவிக்கப்பட்டவுடன் அல்லது அவை அரச கட்டுப்பாட்டில் இருக்கும்.பட்சத்தில் இரண்டு விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்று -இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதல். அதன் அர்த்தம், புனர்வாழ்வு மற்றும் உட்கட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்து மக்களின் பொருளாதார வாழ்வை மீள ஏற்படுத்துதல் ஆகும்.

அதேவேளை, மக்கள் தமது அரசியல் எதிர்காலத்தைத் தாமே தீர்மானிக்கக் கூடிய அரசியல் நடவடிக்கைகளும் அவசியம். அதில் அதிகாரப் பகிர்வும் முகியமானது. இது நம்பகத்தன்மை மிக்க விதத்தில் மேற் கொள்ளப்பட வேண்டும். அப்படி இல்லாது போனால் தனிமைப்படுத்தல் தொடர வழி ஏற்படலாம்.

இலங்கையின் தற்போதைய மோதல் ஏற்படுத்திவரும் மனிதாபிமான தாக்கம் குறித்தும் இனப் பிரச்சினையின் அரசியல் அம்சம் மற்றும் புனர்நிர்மாண அபிவிருத்தி முயற்சிகள் பற்றியும் இந்திய, அமெரிக்க அதிகாரிகளுடன் தாம் ஆராய்ந்தார் எனவும், இரு நாடுகளும் இது தொடர்பில் பொதுவான கருத்தினைக் கொண்டுள்ளன எனவும்,மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து மக்கள் அமைதியான முறையில் வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என இரு நாடுகளும் கருதுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-சி)

# சமய ஸ்தலங்கள் மீதான புலிகளின் தாக்குதல்களில் 412 பேர் பலியாகினர்

## 24 வருடக் கணக்கென்கிறார் ஊடக அமைச்சர்

கொழும்பு, மார்ச் 13

புலிகள் 1985ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை சமய ஸ்தலங்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் 412 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவே இதைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மாத்தறையில் இடம்பெற்ற மீலாதுன்நபி விழாவின்போது புலிகள் மேற் கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் பொது மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

இத்தாக்குதலில் சிக்கிக் காயமடைந்த அமைச்சர் மஹிந்த விஜயசேகர இப்போது தேறி வருகின்றார். அவர் விரைவில் குணமடைய வேண்டும் என்று நாம் பிரார்த்திக் கிறோம்.

புலிகள் எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத மிலேச்சத்தனமான பயங்கரவாதிகள் என்பதை அவர்கள் அடிக்கடி நிரூபித்து வருகின்றனர். தற்போதைய தாக்குதலை முழு உலகமும் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

உலகில் இருந்த பல ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ளன. ஆனால், புலிகள் 30 வருடங்களாகப் பயங்கரவாத செயற்பாட்டில்தான் ஈடுபட்டு வருகின்றனர்.

1985 ஆம் ஆண்டுமுதல் புலிகள் சமயத் தலங்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இத்தாக்குதல்களில் பௌத்த, கிறிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாமிய வணக்கஸ்தலங்கள் அனைத்தும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

இந்த நான்கு மதங்களையும் சேர்ந்த அப்பாவி பொதுமக்களும் சமய குருமார்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர். தற்போது மாத்தறையில் இடம்பெற்ற மீலாதுன் நபி நிகழ்வில் தாக்குதல் நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்திருக்கின்றனர்.

இவ்வாறாக 1985 ஆம் ஆண்டு முதல் இப்போதுவரை புலிகள் சமய ஸ்தலங்கள் மீது மேற்கொண்ட தாக்குதல்களில் 412 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களுள் சிறுவர்கள், பெரியவர்கள், சமய குருமார்கள் எனப் பலரும் அடங்குகின்றனர். அரசு இவ்வாறான தாக்குதல்களை மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் அரசு மாத்தறைத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது என்றார்.

(அ-சி)

# வாழைச்சேனைப் பகுதியில் அரச பஸ் நேற்று தீக்கிரை

மட்டக்களப்பு வாழைச்சேனை- மியான்குளம் இடையில் உள்ள காட்டுப்பகுதியில் வைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஒன்று நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்ஜித் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து கல்முனைக்குச் சென்று கொண்டிருந்த பஸ்ஸை வழிமறித்த இராணுவ சீருடையை ஒத்த சீருடையை அணிந்திருந்த நபர்கள் சோதனை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறி பயணிகளை பஸ்ஸைவிட்டு இறங்கி முன்நோக்கிச் செல்லுமாறு பணித்துள்ளனர்.

அதன் பின்னர் குறித்த பஸ்ஸை அவர்கள் எரித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ-சி)

# மாநகரப் பகுதியில் தினமும் சுத்திகரிப்புப் பணி

யாழ். நகரப்பகுதியில் சுத்திகரிப்புப் பணிகள் தினமும் மேற்கொள்ளப்படு கின்றன.

யாழ் மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த சுத்திகரிப்பு தினமும் இடம்பெற்று வருகின்றன.

பிரதான வீதிகள் ஒழுங்கைகள் மற்றும் பொது இடங்களில் உள்ள குப்பை மற்றும் கழிவுகள் தினமும் துப்பரவு செய்யப்பட்டு அகற்றப்பட்டு வருவதை அவதானிக்க முயடிகிறது. (1-224)

# உதைபந்தாட்டம்

யாழ் மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதிப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-


* மானிப்பாய்-ரெட்றேஞ்சர் விளையாட்டுக்கழகம் எதிர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம்.
* மானிப்பாய் பிக்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகம்.

(1-86)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road, Kanthamadam, Jaffna
Phone: 0212228093
E-mail: alliancejaffna@yahoo.com
LEARN FRENCH THE FRENCH WAY
பிரெஞ்சு மொழி வகுப்புகள்
பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன!
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். கட்டணம், ஏனைய விவரங்களை நேரில்/தொலைபேசியின் ஊடாக பெறலாம்.

ஆசிரியர் தேவை
* A/L 2011 கலைப் பிரிவுக்கு தமிழ், இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், அளவையியல், புவியியல், அரசியல், பொருளியல், வரலாறு, இலகு கணிதம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.
* தகைமையும் அனுபவமும் உள்ளோர் நேரிலோ/தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.
அறிவகம் கல்வி நிலையம்

## விழிநீர் சிந்தும் நினைவுப் பூக்கள்



### தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள்

01.03.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று விநாயகர் திருவடி நிழலை அடைந்த அல்வாய் மாலிசந்திப்பிள்ளையார் கோயில் குருக்கள் தேவராஜக்குருக்கள் இரவீந்திரக் குருக்கள் அவர்களது ஆத்மா இறைவனடிசேர இறை வனை வேண்டுவதோடு மீளமுடியாத துயரில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குமாரசாமி அன் சன்ஸ் ஸ்தாபனத்தினரும் சக ஊழியர்களும்.
உடுவில், சுன்னாகம்.
தொ.பே.இல. 060 221 3000

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வனிதலட்சுமி மகேஸ்வரன்

*(தையல் ரீச்சர் - மிதிலை அன்ரி)*



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி வனிதலட்சுமி மகேஸ்வரன் நேற்று (12.03.2009) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரனின் அன்பு மனைவியும் ஜனகேஸ்வரனின் (போதனாசிரியர், ஊடக வளங்கள் பயிற்சி மையம், யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு தாயாரும் கிருபாவின் (ஆசிரியை, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) நேசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2009) வெள்ளிக்கிழமை பி.ப.1மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'மிதிலை'*
*324, பலாலி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
மகன், மருமகள்.

## திருமதி பசுபதி செல்வராசா



தெல்லிப்பழை கிழக்கு, விராங்கொடையைச் சேர்ந்த திருமதி பசுபதி செல்வராசா 11.03.2009 புதன்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் கந்தயா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கமலா மற்றும் ஜெயராணியின் அன்புத் தாயும் சில்வெஸ்ரர் கெம்ப்ராஜ் அவர்களின் அன்பு மாமியும் செந்தில்ராஜ் (Computer Engineer) அவர்களின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், பூரணம், K.T.பொன்னம்பலம் இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (12.03.2009) வியாழக்கிழமை இத்தாலியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தொ.பே: 0039095601726 மகள் (ஜெயராணி - இத்தாலி).

## திருமதி குணநாயகம் ஞானம்மா

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணநாயகம் ஞானம்மா நேற்று (12.03.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற சுப்பையா - பராசக்தி தம்பதியினரின் மருமகளும் குணநாயகத்தின் அன்பு மனைவியும் இராஜேந்திரனின் அன்புத் தாயாரும் சரஸ்வதியின் (ஆசிரியை, கலைமகள் பாலர் பாடசாலை) அன்பு மாமியும் துரைராசாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்பு மைத்துனியும் சாஜிபானுவின் (விஞ்ஞான பிரிவு, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*M.S. லேன்,*
*கோண்டாவில்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இன்னும் ஒரு மாதத்தில் பொருளாதார நெருக்கடியா?

வரலாற்றில் என்றுமில்லாதவாறு, இவ்வருடம் இலங்கை பென்னம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுக்கும் நிலை உருவாகியுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சி-ஐக்கிய தேசியக் கட்சி - எச்சரித்துள்ளது.

அக்கட்சியின் சார்பில், நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியை எதிர் நோக்கப்போவதாக விவரித்திருக்கிறார். அதற்கான காரண காரியங்களையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அரசைக் கொண்டு நடத்துவதற்கு - நாட்டை இயங்கச் செய்வதற்கு - மக்களின் வாழ்க்கை நிலை மேலும் ஆழமான குழிக்குள் விழாமல் தடுப்பதற்கு - இந்த வருடத்துக்கு 40 ஆயிரம் கோடி ரூபா தேவை. ஆனால் அரசாங்கம் 19 ஆயிரம் கோடி ரூபாவை மட்டுமே சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்டிருக்கிறது. அந்தக் கடன் உதவியை சர்வதேச நாணய நிதியம் வழங்க மறுத்தால், அல்லது குறைத்து வழங்குவதற்கு முடிவு செய்தால், வழங்கப்படும் நிதி உடனடியாக கிடைக்காவிடின் அரசாங்கம் அல்லாடப்போகின்றது. மக்கள் என்றும் இல்லாதவாறு கஷ்டமுறுவர் என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல புட்டுக் காட்டியிருக்கிறார்.

அரசுக்கு- நாட்டுக்கு - மக்களுக்கு - இப்படியான ஓர் பேரிடி விழக் காத்திருக்கின்றது என்ற விடயம் பல தரப்பினருக்கு இந்த அளவு விவரமாக இதுவரை தெரிந்திருக்காது எனலாம். இந்தப் பெரிய விவகாரம் குறித்து அரசாங்கம் மக்கள் அறியக்கூடியதாக எந்த விவரத்தையும் பகிரங்கப்படுத்தியதாகத் தெரியவில்லை.

நாட்டின் பொருளாதாரம், நாளாந்தம் வீழ்ச்சி கண்டு வருவது பரகசியம். வெளிநாட்டுக் கடனிலேயே இலங்கை அரசு தனது காலத்தை- பதவியை - ஓட்டிக் கொண்டிருக்கிறது. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கென அரசு நடத்தும் போரும் கடன் பணத்திலேயே நடத்தப்படுகின்றது.

நாட்டின் பொருளாதாரம் அரசின் நிதிநிலைமை எந்தளவுக்கு வற்றி வரண்டு போனாலும் பரவாயில்லை, போரை வென்று காட்டினால், அடுத்த தேர்தலில் ஆட்சியைத் தொடரலாம் என்ற ஒரே இலக்குடன் மக்களின் வரிப்பணத்தையும், வெளிநாட்டுக் கடன்களையும் அரசு கண்ணை மூடிக்கொண்டு செலவிட்டு வருகிறது.

பங்குச் சந்தையில் ஏற்பட்ட தளம்பல்களால், செல்வந்த நாடுகளின் பொருளாதாரங்களே என்றுமில்லாதவாறு ஆட்டம் காணும் இந்தவேளையில், நாட்டில் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கை நிலை தாழ்வுற்றுப் போகும் அபாயத்தையும் கிஞ்சித்தேனும் கருத்தில் கொள்ளாது போர்க் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

அதனை ஒரு புறம் வைத்தாலும் -

நாட்டின் சுய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான உகந்த நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டாமல், தேசிய உற்பத்தி வருவாய் குறித்தோ, உயர்ந்து செல்லும் மக்களின் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் குறித்தோ, மொத்தத்தில் தேசிய நிதியத்தைப் பலப்படுத்துவதிலோ உரிய அக்கறை இன்றி அரசின் செயற்பாடுகள் நடந்தேறி வருகின்றன.

இத்தகைய பின்னணியில் வெளிநாட்டுக் கடன் இன்றி நாடு அசையாது, இயங்கமுடியாது என்ற நிலையில் அரசாங்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இது குறித்து அரசுக்கு அக்கறையோ, கவலையோ இல்லை என்ற போக்கே காணப்படுகிறது.

அதனையும் இன்னொரு புறம் வைத்தாலும் -

அரசாங்கத்தின் இயக்கத்துக்கும் நாட்டின் இயக்கத்துக்கும் தேவையான 'கடன் வாங்கிக் கல்யாணம்' நடத்தும் காரியத்திலும் கூட, அது உஷாருடன் செயற்படவில்லை என்பதனை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர் உள்ளும் புறமுமாக உடைத்துக் காட்டியிருக்கிறார்!

வெளிநாடுகளிடம் கடன் வாங்காமலே நாட்டின் வரவு- செலவுகளைச் சமாளிக்கப் போவதாகக் கூறி பதவிக்கு வந்த அரசு, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் கடன் பணத்தை வைத்தே பல செலவினங்களைத் திட்டமிட்டிருக்கிறது; அதற்காகக் காத்திருக்கிறது என்ற தகவல் விசேட பொருளாதாரக் கொள்கை என்ற ஒன்று இந்த நாட்டுக்கு உண்டா என்ற கேள்வியையே மேலெழ வைத்துள்ளது. எல்லாமே எழுந்தமானத்தில் நடைபெறுகிறதா என்ற சந்தேகத்தையும் தோற்றுவிக்கிறது.

சரி அதனையும் கண்டும் காணாது ஒதுக்கிவிட்டாலும்-

40 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் போது, 19 ஆயிரம் கோடி ரூபா மட்டுமே சர்வதேச நாணய நிதியத்திடம் - கடன் கேட்கப்பட்டிருக்கின்றது என்றால் -

மிகுதி 21 ஆயிரம் கோடி ரூபாவையும் எங்கிருந்து அரசு பெறப்போகிறது என்பது வெளியாகவில்லை - மக்களுக்கு தெரியாது!

இத்தகைய ஒரு பின்புலத்தில் -

இன்னும் ஒரு மாதத்தில் வரப்போவதாக ஐ.தே.க. எச்சரித்துள்ள நிதி நெருக்கடியை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது என்ற கேள்விக்கும் பதில் அரசாங்கத்திடம் உண்டோ, இல்லையோ?

அது மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும். அவர்களுக்குத் தெரியவரவேண்டும்.

இந்த விடயம் மூடி மறைக்கப்பட்டால் இலங்கையில் மக்கள் ஆட்சி நடப்பதாகக் கூறுவது எந்த வகையில் பொருந்தும்?

இது சர்வாதிகாரத்தின் ஒரு பக்கமாகவல்லவா நோக்கப்படும்!

# நலன்புரி நிலையங்களிலுள்ள 498 மாணவர்களுக்கான வகுப்பறைத் தொகுதிகள் கொடிகாமத்தில் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,மார்ச் 13

கொடிகாமம், மிருசுவில் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 498 மாணவர்களுக்காக கொடிகாமம் அ.த.க.பாடசாலை வளாகத்தில் யுனிசெவ் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதிகள் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

யுனிசெப் பிரதிநிதி டயன் அம்மையாரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினமும் வகுப்பறைகளைத் திறந்து வைத்தனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் யுனிசெவ், சோஆ, யேசுபணி அகதிகள் சபை, சிறுவர் பாதுகாப்பு, உலக உணவு, கரித்தாஸ் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் உட்பட பலரும் பங்கு பற்றினார்கள்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தரம் 1 தொடக்கம் தரம் 11 வகுப்பு வரையான 498 மாணவர்களுடன் கொடிகமம் அ.த.க.பாடசாலைச் சேர்ந்த 149 மாணவர்களும் கல்வி கற்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வகுப்புகளில் இணைந்த மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் புத்தகப் பைகளையும், கற்றல் உபகரணங்களையும், 'யுனிசெவ்' நிறுவனத்தினர் கற்றல் உபகரணங்களையும் உலக உணவுத் திட்ட நிறுவனத்தினர் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கான உலர் உணவுகளையும், தட்டுக்களையும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் கரித்தாஸ் ஆகிய நிறுவனங்கள் தளபாடங்களையும் வழங்கினார்கள்.

யேசுபணி அகதிகள் சபை நிறுவனத்தினர் தைக்கப்பட்ட சீருடைகளையும் சப்பாத்து காலுறைகளையும் வழங்கினார்கள்.

'சோ.ஆ' நிறுவனம் மலசல கூடம் அமைக்கும் பணிகளை முன்னெடுக்கவுள்ளது.

(50-207)

# புதுமாத்தளனில் தற்காலிக குடிசைகள் காற்றுடன் கூடிய மழையால், கடும் சேதம்

## இடம் பெயர்ந்த மக்கள் பெரிதும் பாதிப்பு

முல்லைத்தீவில் அண்மையில் வீசிய கடும் காற்றுடன் கூடிய மழையால் புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 50 ஆயிரத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்த பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து வந்த மக்களில் அநேகமானோர் புதுமாத்தளன் பகுதியில் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தற்காலிக குடிசைகளும் புயல் காற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழை இடம்பெயர்ந்து புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தில் தற்காலிக குடிசைகளில் வாழும் மக்களைப் பெரிதும் பாதித்திருப்பதாகவும் வேறிடம் செல்ல வழியில்லாது இவர் கள் கஷ்டப்படுவதாகவும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்கள் போதிய உணவு, மருந்து, சுத்தமான குடி தண்ணீர் இன்றி வாழ்வதாகவும் அத்துடன் தற்காலிக மலசல கூடமும் சேதமடைந்ததால் இவர்கள் பெரும் அவலத்துக்கு உள்ளாகியிருப்பதாகவும் டாக்டர் சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

எனவே உடனடியாக பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு 50 ஆயிரம் தற்காலிக குடிசைகள் தேவைப்படுவதுடன், தற்காலிக மலசலகூடமும் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# கடத்தப்பட்ட பேராசிரியர் நேற்று விடுவிக்கப்பட்டார்

கொழும்பு,மார்ச் 13

கடத்திச் செல்லப்பட்ட கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஊடகத் துறை பேராசிரியரும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவருமான தம்பிக்க கங்கனாத் திஸாநாயக்க நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்ஜித் குணசேகர தெரிவித்தார்.

கடத்திச் சென்றவர்கள் அவரை வெலிவேரியப் பகுதியில் விட்டுச் சென்றுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

தான் எழுதவுள்ள நூல் தொடர்பாக தன்னிடம் கடத்தல்காரர்கள் விசாரித்தனர் என்றும் கடத்தல்காரர்கள் தங்களை பொலிஸார் எனத் தனக்கு அறிமுகப்படுத்தினர் என்றும் அவர்களிடம் பிஸ்டல்கள் காணப்பட்டன என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

மஹரகம,கொட்டாவ மத்தேகொடவில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் இவர் கடத்திச் செல்லப்பட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது பேராசிரியர் திஸாநாயக்க அவரது ஊடக ஆலோசகராக இருந்தவர் என்பது குறிபிடத்தக்கது.

(அ-சி)

# நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ்.குடாநாட்டில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மின் தடைப்படும் என மின்சார சபையின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

அவசர திருத்த வேலைகள் காரணமாக இந்த மின்தடை ஏற்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (50)

# மேல்மாகாணசபைத் தேர்தல் குறித்து கட்சிச் செயலர்களுடன் இன்று பேச்சு

மேல்மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சி முக்கியஸ்தர்களுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

கட்சிகளின் செயலாளர்களுடனேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என மேலதிக தேர்தல் ஆணையாளர் சுமணசிறி தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது விசேடமாக மாகாணசபைத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் இடம்பெறும் விதம் குறித்தும் ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மேல்மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனத் தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை, மேல்மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக இதுவரை பாரிய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை எனத் தேர்தல் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

# ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்பாக திங்களன்று தமிழர்கள் 'உரிமைப் போர்'

ஐரோப்பா வாழ் தமிழ் மக்களால் பெல்ஜியத்தின் தலைநகர் பிறசல்ஸில் அமைந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றம் முன்பாக 'உரிமைப் போர்' என்ற தொனிப்பொருளில் பேரணியும் பொதுக்கூட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஐரோப்பா வாழ் தமிழ் இளையோரின் ஏற்பாட்டில் எதிர்வரும் திங்கட்கிழமை (16ஆம் திகதி) முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை இப்போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனத் இணையத் தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான மக்கள் திரளாக கலந்து கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்திடம் தமிழீழ மக்களின் கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தையும், தன்னாட்சி உரிமையையும், தமிழீழ மக்களின் அரசியல் தலைமையான விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் அங்கீகரிக்கக் கோரியும், பௌத்த சிங்கள பேரினவாதத்தின் தமிழின அழிப்பினை தடுத்து நிறுத்தக் கோரியும் இப்போராட்டம் மூலம் வலியுறுத்தப்படவுள்ளது.

அத்தோடு, வன்னியில் போர் முற்றுகைக்குள் அல்லற்படும் மக்களுக்கான உணவு, மருந்துப் பொருட்கள் உட்பட்ட உடனடி மனிதாபிமான உதவிகள் அனுப்பி வைக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும்,

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இருந்து படைகள் வெளியேற்றப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளும் வலியுறுத்தப்படவுள்ளன.

இதே நாள் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலில் சுவிஸ் வாழ் மக்களால் ''சாவிலும் எழுவோம்'' பேரணி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

(க-3)

# வன்னி மக்களுக்கு பிரிட்டனிலிருந்து உணவுக் கப்பல் அனுப்ப ஏற்பாடுகள்

## புலம்பெயர் தமிழர்களிடம் பொருள் சேகரிப்பு

லண்டன்,மார்ச் 13

முல்லைத்தீவில் பட்டினியால் சாகும் மக்களுக்கு பிரித்தானியாவிலிருந்து நேரடிக உணவுக் கப்பல் அனுப்ப புலம்பெயர் மக்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அத்தியாவசிய பொருள்களையும், மருந்துவகை மற்றும் குழந்தைகளுக்கான பால்மா பொருள்களுடன் பிரித்தானியாவில் இருந்து நேரடியாக முல்லைத்தீவு பகுதிக்கு செல்ல விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பல் செல்வதற்கான அனைத்து நடவடிக்கையும் பூர்த்தியடைந்துள்ள நிலையில் உணவுப் பொருள்களை இடம் பெயர் மக்களிடம் எதிர்பார்த்துள்ளனர். இதற்கென பிரித்தானியாவில் பல பாகங்களில் உணவு சேமிப்பு நிலையங்கள் விரைவில் திறக்கப் படவுள்ளது.

இக்கப்பலுக்கு ஒப்பரேஷன் ''வணங்கா மண்'' எனப் பெயரிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 01 | 14.03.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.ப. 07.04 வரை |
| நட்சத்திரம்: | சித்திரை |
| | மு.ப.08.56 வரை |
| சுபநேரம்: | 03.21 04.51 |
| ராகுகாலம்: | 09.21 10.51 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES FOR TECHNICAL OFFICERS

UN-HABITAT Jaffna office invites application for the post of Technical Officers on contract basis

1.No of Posts : 04 (Four)

2.Place of work : Jaffna District

3.Qualifications:

Should have G.C.E. O/L and National Certificate of Technology or equivalent qualification with a minimum of two years experience in housing construction, Infrastructure and other development activities in Public Sector, Non - governmental Organization or International Agencies. Knowledge of local areas assigned and experienc in working with communities will be an added advantage.

4.Closing date: 25.03.2009

Please apply with Bio - Data and copies of certificates and Contact Telephone Nos, E-mail address etc. to the following address:-

**District Manager,**
**UN - HABITAT,**
**No.84, Temple Road,**
**Jaffna.**

Telephone Nos: 021 2228137, 060 2216419
Email Address : parameswaran@unhabitat.lk.

District Manager,
UN - HABITAT


## வலி. வடக்கில் விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுப்பு

வலி.வடக்கு, மார்ச்13

சுன்னாகம் றோட்டறக்ட் கழகத்தினால் சிக்கின்குனியா, டெங்கு ஆகியவற்றுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் ஒரு கட்டமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகளில் அங்கத்தவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் தெல்லிப்பழை, சுன்னாகம் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து கருத்தரங்குகள், கலந்துரையாடல்களையும் நடத்தியும் வருகின்றார்கள்.

பொதுமக்கள் கூடும் நகரப் பகுதி, பஸ் நிலையம் ஆகிய இடங்களிலும் துண்டுப் பிரசுரங்களையும் வழங்கி வருவதுடன் சிரமதானப் பணிகளினையும் முன்னெடுத்து வருகின்றனர்.

(1-86)

## மூதாட்டி கொலை தொடர்பாக இருவருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். மார்ட்டீன் வீதியில் புதைகுழி ஒன்றில் இருந்து மூதாட்டி ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவர் யாழ். நீதிவான் இ.வசந்தசேனன் முன்னிலையில் நேற்று ஆஜர்செய்யப்பட்டனர். எதிர்வரும் 26ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## தீவக வலய அலுவலகத்தில் தீவிபத்து

வேலணை, மார்ச் 13

தீவக வலயக் கல்வி அலுவலக்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் அலுவலகத்தில் இருந்த போட்டோ பிரதி இயந்திரம், கணனி, மேசை, கதிரை என்பன எரிந்து நாசமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

(1-267)


## IIS

கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரவுகள் ஆரம்பம்

விசேட கட்டணச் சலுகையில் அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | ஆரம்பம் | |
|---|---|---|
| பிரிவு 01. | → 14.03.2009 | காலை 10.00 மணி |
| பிரிவு 02. | → 16.03.2009 | |

கற்கை நெறிகள்

01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System
10. Diploma in Visual Programming.
11. Certificate in Auto CAD
12. Certificate in Java Programming
13. Certificate in Visual Basic Programming



"கணனிக் கல்வியைத் தனித்துவம் மிக்கதுமான IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்."

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933 E.Mail : iisccgsltnet.lk


## பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்
### சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி எமது சங்கத்தால் 10.03.2009 அன்று அதிஷ்டம் பார்க்கப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கங்களுடையோர் அதிஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 2161 |
| இரண்டாம் பரிசு: | 768 |
| மூன்றாம் பரிசு: | 559 |

ஆறுதல் பரிசு
3897, 4150, 3026, 74, 55, 2643, 3705, 111, 2620,3853

செயலாளர்
பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
J/403 பங்குப்பணிமனை - பருத்தித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



### தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள்
(பிரதம குரு, அல்வாய், மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்)

எமது ஆலயத்தில் பிரதம குருவாகவும், மக்களுக்கு இனியவராகவும் அறிவுரை கூறி அன்பு காட்டி பலராலும் மிகவும் நேசிக்கப்பட்டுவந்த இரவி ஐயாவுடைய மறைவுச்செய்தி எமக்குப் பேரிடியாக அமைந்தது. அவரது பிரிவு ஈடு செய்ய முடியாதது அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஏழாந் திருவிழா உபயகாரர்கள்
மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்.

## கடை வாடகைக்கு

யாழ்.நகரின் மத்தியில் விசாலமான கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 4590130, 077 8286605

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Yamaha News Mate விற்பனைக்குண்டு. 396, நாவலர் வீதி, கயிலாய பிள்ளையார் கோயிலடி பழைய உதயன் ஒழுங்கை யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு 10-12 மட்டும் பார்வையிடலாம். விலை 1 லட்சம் மட்டும்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த லண்டனில் குடியுரிமை உள்ள 1962 இல் பிறந்த மகம் 1ஆம் பாதம் 20இல் கிரகபாவம் உடைய M.B.B.S. Doctor, யாழ்.பல்கலைக்கழகம் (F.R.C.S.) லண்டன். லண்டனில் பிரபல மான வைத்தியசாலையில் Main Doctor ஆக கடமை புரியும், சட்டப்படி விவாகரத்துப் பெற்று 11 வயது மகனுடன் இருக்கும் மணமகனுக்கு படித்த ஓரளவு ஆங்கில அறிவுள்ள மணமகள் தேவை. அனைத்து தீவுகளைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

வெளிநாடு உள்நாடு மற்றும் கனடாவில் குடியுரிமையுள்ள 1970இல் பிறந்த 8இல் செவ்வாய் கிரகபாவம் 62 உடைய மணமகனுக்கு படித்த ஓரளவு அழகு உள்ள மணமகள் தேவை. மணமகன் மிக விரைவில் (Colombo) வரவுள்ளார்.

தொடர்புகளுக்கு:
T.P.No.0778501013, 0776184434, 0774047531
E.Mail adolves vaniimb@yahoo.com

## கண்ணீர்ப்பூக்கள்

எமது பாடசாலையில் சக ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் செல்வி இ.ஜெயராணி அவர்களது தாயார்

### திருமதி பரமேஸ்வரி இராசேந்திரன்

காலமானதையிட்டு கலங்கி நிற்கும் உறவுகளோடு
எமது கண்ணீர்ப் பூக்களையும்
காணிக்கை யாக்குகின்றோம்.

(யா/ பேரியபுலம் ம.வி.). பாடசாலைச் சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூரணபாக்கியம் மயில்வாகனம்



தையிட்டிப்புலம், தெல்லிப்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்பொது சங்கரத்தையில் வசித்து வந்தவருமான திருமதி மயில்வாகனம் பூரணபாக்கியம் 09.03.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வையிரவப்பிள்ளை-குஞ்சரப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலம் சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், இராமலிங்கம், சிவராசா, காலஞ்சென்ற அன்னபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, கதிர்காமநாதன் (பிரான்ஸ்), பாஸ்கரலிங்கம் (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (ஆசிரியர், அராலி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகேசு, சூரியகுமாரி (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்), சுஜாத்தா (RDHS Office, Jaffna) ஆகியோரின் அன்பு மாமியும், பர்மிலா, சர்மிலா, செந்தூரன் (வட்டு மத்திய கல்லூரி) லுசில், சிவன், சௌமியா, தரண்யா, ஆதீசன் (பிரான்ஸ்), பிரவீனன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2009) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12 மணிக்கு வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr.செல்லத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பிமுத்து நல்லதம்பி



(Retired Senior Physiotherapist, போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம், கண்டி, அனுராதபுரம், கொழும்பு)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து நல்லதம்பி 10.03.2009 கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பரமசாமி - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், பரமேஸ்வரின் பாசமிகு கணவரும், நகுலராஜ் (லண்டன்), றகுலராஜ் (லண்டன்), திலகராஜ் (லண்டன்), ஹனிஸா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் யான்சி, இகலிகை, ரமணி, தேவதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரோசி, லிடுசி, மனோராஜன், சரீகன், ரோசன், சரண்யா, ரமண்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் நாகலிங்கம் (கனடா), Dr.சீவரத்தினம் (குருநகர் மத்திய வைத்தியமனை, யாழ்ப்பாணம்), சபாரத்தினம் (NEHRP கச்சேரி,யாழ்ப்பாணம்), செல்வரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகலோசினி, சுந்தரேஸ்வரி, கமலாதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2009) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள் - Dr.த.சீவரத்தினம்
14, கச்சேரி ஒழுங்கை யாழ்ப்பாணம்.
த.சபாரத்தினம், 435, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்
2739, VICTORIYA PARK, Avenue,
Apartment. 140, Scarborongh
Ontario Miv - 1H8 Canada.
T.P. 0016473456672

## 20 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 17 . 05 . 1932 | 13 . 03 . 1989 |

### அமரர் கந்தையா ஜெயசீலன் பரமலிங்கம்
(ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்)

கண்ணின் மணி போலக் காத்துமே எமை வளர்த்து
மண்ணிலே நாங்கள் மாண்புறவே வாழ வைத்தீர்
மாணவரும் ஊரவரும் உயர வழி சமைத்தீர்
எண்ணிலடங்கா நன்மை பல செய்த அப்பாவே
இருபது ஆண்டுகள் எப்படித்தான் ஓடி மறைந்தனவோ?
உங்கள் இனிய நினைவுகளை எங்கள் நெஞ்சினிலே
என்றும் சுமந்து நிற்போம் அவை
எம்மை வாழவைக்கும்

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

## 6 ஆம் மாத நினைவு அஞ்சலி



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 03 . 05 . 1976 | 12 . 10 . 2008 |

### அமரர் பரமலிங்கம் மேவின் அருண்குமரன்
(இ.போ.ச.சாரதி, வவுனியா)

எங்கள் குடும்பத்தின் கடைக்குட்டி நீதானப்பா!
எம்மையெல்லாம் முந்திக்கொண்டு இயேசு
அப்பாவிடம் ஓடிய தேன்? ஏறு போன்ற உன் நடை எங்கே?
என்றுமே எவர்க்குமே அஞ்சாத இரும்பு நெஞ்ச மெங்கே
ஆறுமாதத்தின் முன் அகாலமரணமானாய்
அன்று முதல் இன்றுவரை அழுதழுது சாகின்றோம்
"சோதி" தோன்றும் உலகமதில் உன்னைச்
சந்திக்க, நாளை எதிர்பார்த்து
காத்திருக்கின்றோம் இங்கு நாங்கள்

குடும்பத்தினர்.

## ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை விண்ணப்பப்படிவங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கு பாடசாலைகளில் இருந்து தோற்றுபவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இந்தப் படிவங்களை பாடசாலை அதிபர்கள் தத்தமது வலயங்களில் இன்று பிற்பகலுக்கு பின்னர் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.கல்வித்திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வுச் செயற்றிட்டச் செயலமர்வு அண்மையில் காட்டுப்புலம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

இதில் முறைசாராக் கல்விச் செயற்றிட்ட அலுவலர் என்.சண்முகராஜா உரையாற்றுவதையும் சங்கானைப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, பாடசாலை அதிபர் அ.ஸ்ரீஸ்பரலிங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்திலும், செயலமர்வில் கலந்துகொண்ட பெற்றோர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## சோதனை நடவடிக்கைகளால் வவுனியா - கொழும்பு ரயில் பயணிகள் அசௌகரியம்

வவுனியா,மார்ச் 13

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு ரயில் மூலம் வரும் பயணிகள் சோதனை நடவடிக்கைகளால் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து கொழும்பு வரும் பயணிகள் வவுனியா ரயில் நிலையத்தில் சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். அதேவேளை மதவாச்சியில் வைத்தும் பயணிகள் சோதனையிடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சோதனை நடவடிக்கையின் பொருட்டு ரயில் கால தாமதமாகவே மதவாச்சியிலிருந்து புறப்படுவதால்தாம் கொழும்பில் பலவித அசௌ கரியங்களுக்கு உள்ளாவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

## சாவகச்சேரி கூ.சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை

யாழ்ப்பாணம்,மார்ச் 13

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய இயக்குநர்சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் இயக்குநர்சபைத் தலைவராக இ.இராஜாராமும், உப தலைவராக வே.கிருஷ்ணனும் மேலும் ஐந்து பேரும் பொதுச் சபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்ட கூட்டுறவு உத்தியோகத்தர் கணேஸ் தலைமையில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்து கொண்டார். (50-207)

## வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்கு கத்தோலிக்க ஆயர்கள் குழு விஜயம்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள பொது மக்களின் சுகநலன்களை நேரில் கண்ட றியும் நோக்கில் கத்தோலிக்க ஆயர்கள் குழுவொன்று அங்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தெரிவிப்பதாக ஆயர்கள் குழு அங்கு உறுதியளித்துள்ளது.

பேராயர் வியன்னி பெர்னாண்டோ, பேராயர் நோபேட் அந்ராடி, பேராயர் அன்ரனி பெரேரா, பேராயர் கிளிடஸ் பெரேரா மற்றும் பேராயர் வெலன்ஸ் மெண்டிஸ் ஆகியோர் வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பேராயர் குழுவுடன் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பும் இணைந்து கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இடைத்தங்கல் முகாம்களில் தேவாலயங்களை அமைப்பதற்கு மதகுருமார் இணக்கம் தெரிவித்துள்ளனர். (50)

## வீதி விபத்தில் ஆசிரியர் காயம்

யாழ்ப்பாணம்,மார்ச் 13

வீதி விபத்தில் சிக்கி ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நுணாவில் சந்தியில் இடம்பெற்றது.

கைதடி - நுணாவில் அ.த.க.பாடசாலை ஆசிரியரான மட்டுவில் வடக்கைச் சேர்ந்த த.ஜெபதாஸ் (வயது 35) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் சரசாலையைச் சேர்ந்த பாடசாலை மாணவனான ம.திலக்ஸன் (வயது 11) என்பவரும் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (50-207)

## கருணா குழுவினரோ வேறு குழுக்களோ ஆயுதந் தரித்திருப்பது ஆபத்தானதல்ல

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து வடக்கு - கிழக்கு முழுமையாக விடுவிக்கப்படும் வரையில் கருணா குழுவினரோ அல்லது வேறும் ஆயுதக் குழுக்களோ ஆயுதந்தரித்திருப்பது ஆபத்தானதல்ல என ஊடகத்துறை அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கொண்டிருந்த போதும், தேர்தல் நோக்கங்களுக்காக ஆயுதங்களை அவர்கள் பயன்படுத்தவில்லை எனவும், இதனால் சில குழுக்கள் ஆயுதங்களை கொண்டிருப்பது பாரிய பிரச்சினை அல்ல எனவும் அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

உக்கிர யுத்தம் ஒன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் நூறு வீத ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியாதெனவும் மக்களின் சுதந்திரம் அவசர அதிகாரம் ஒன்றினால் கட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (50)

## கொட்டடி, குருநகர் மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,மார்ச் 13

கடந்த சில தினங்களாக கொட்டடி, குருநகர் மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன.

கடந்த திங்கட்கிழமை பெய்த கடும் மழையை அடுத்து பெரும் தொகை மீன்கள் பிடிபடுகின்றமையே இந்த விலை வீழ்ச்சியடைந்துள்ளமைக்குக் காரணம் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொட்டடி மீன்சந்தையில் ஒரு கிலோ மீன் 200 ரூபா முதல் 250 ரூபா வரையும் நண்டு கிலோ 75 ரூபாவும், கணவாய் கிலோ 300 ரூபாவும், பெரிய இறால் கிலோ 275 ரூபாவும் விற்பனை செய்யப்படுகின்றது. (50-224)

## தவக்காலச் சிந்தனை

### "பொறாமையை அகற்றி பொறுமை கொள்வோம்"

இறைவன் எமக்கு ஏற்பாடு செய்துள்ள நிலையான அரசின் வாழ்விற்குரிய உரிமையைப் பெற இவ்வுலகில் எமக்குத் தரப்பட்ட காலம் ஓர் ஆயத்தகாலம். நீண்டதொரு பயணத்தை நாம் மேற்கொள்ள நேரிடில் அதற்காக நாம் செய்யும் ஆயத்தங்கள் பலவகை, அவ்வாறே இறையரசை நோக்கிய எமது வாழ்வுப் பயணத்திலும் தவக்காலம் அதிக புண்ணிய நெறிகளை வாழ்வென்னும் பெட்டகத்தினுள் சேகரிக்கும் சந்தர்ப்பமாகவும் அமைகின்றது. சாதாரணமாகவே நாம் மேற்கொள்ளும் பயண இலக்கிற்கு ஏற்ப தேவையற்றவற்றை நீக்கி தேவையானவற்றையே சுவீகரித்துக் கொள்ளுகின்றோம்.

அவ்வாறே நாம் நித்தியமாய் சுவீகரிக்கவுள்ள முடிவில்லா வாழ்வின் இலக்கை அடைவதற்கு எம்மிலே உள்ள எம் உள்ளத்திற்கு சுமையாகவும், இடையூறாகவும் உள்ள பகைமை, பொறாமை, பேராசை, சண்டை, சச்சரவு, அநீதி, பழிவாங்கல், ஏற்றுக்கொள்ளாமை, அகங்காரம், இறை அச்சமின்மை போன்ற துர்க்குணங்களை எம்மிலே களைவதே உண்மையான தவ வாழ்விற்கு முதற்படியும் முன் உதாரணமும் ஆகும். இவற்றை முதலில் எம்மிடமிருந்து நீக்காமல் நாம் மேற்கொள்ளும் வெளிப்பகட்டான உடல் ஒறுத்தல்கள், தர்மங்கள், பக்தி முயற்சிகள், யாத்திரைகள் என்பன பொருள் அற்றவையே. மேற்குறிப்பிட்டவை போன்ற தீய பண்புகள் எம் உள்ளத்தில் பெரும் சுமையாக, ஏன் நீங்காத துயரமாகவே எம்மை அழுத்திக் கொண்டிருக்கும் போது நாம் ஒருபோதும் அமைதியான விடுதலையான வாழ்வை அனுபவிக்க முடியாது. இதன் அடிப்படையிலேயே கவிஞன் பாடுகின்றான், "பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்; தீராத கோபம் யாருக்கு இலாபம்." எமது உள்ளங்களும் இத்தகைய உணர்வில் இருக்குமாயின் அந்நிலையை எம்மிலே இருந்து முழுமையாக நீக்கி பொறுமை அன்பு, ஏற்றுக்கொள்ளல், நீதி, நேர்மை, ஒற்றுமை, பணிவு, இறைபக்தி போன்ற புண்ணியங்களை இத்தவக்காலத்தின் வழியாக எம்மிலே உருவாக்க முயல்வோம். அன்று இவ்வாறான நன்நெறிகளை சமுதாயத்தில் உருவாக்கிய இயேசுவையே யூத தலைமைத்துவம் தமது பொறாமையால் அவர் மீது பழிபாதங்களைச் சுமத்தி சிலுவை மரணத்தையே கொடுத்தது. ஆனால் எந்தத் தீமையையும் நன்மையால் வென்றவரான இயேசு தமது பொறுமையால் அத்தகைய மரணத்தையும் ஏற்று உயிர்ப்பின் வழியாக வெற்றி கொண்டு எமக்கு மீட்பைப் பெற்றுத் தந்தார். அவரது பொறுமை எமக்குப் பெருமைமிகு வாழ்வாகியது. எனவே நாமும் சிறந்த நற்செயலான பொறுமையை எமது வாழ்வின் எத்தகைய நிலையிலும் கடைப்பிடித்து எம்மிலும், எம்மைச் சூழவும் உள்ள பொறாமை என்னும் சுற்று வட்டத்தைத் தகர்க்கும் தகுந்த காலமாக இத்தவக்காலத்தைப் பயன்படுத்துவோம்.

எஸ்.எம். [illegible]

## அமைச்சர் கருணாவுக்கு விரைவில் சு.க மத்திய குழுவில் முக்கிய பொறுப்பு

### ஜனாதிபதி மஹிந்த அறிவிப்பு

விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் முக்கிய பொறுப்பு ஒன்றை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ

நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சராகக் கடந்த திங்கள் அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட வைபவத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

கிழக்கு மாகாணம் தூரமாக இருந்த போதும் அப்பிரதேச மக்கள் மனதால் எம்முடன் நெருக்கமாகவே உள்ளனர். அதை நான் அறிவேன். வடபகுதி மக்களும் அவ்வாறே உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதியதல்ல. கிழக்கு மக்களின் சிறந்த தலைவரான விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையில் 2 ஆயிரம் பேர் இக்கட்சியில் இணைந்துள்ளனர்.

இம்மக்களை நாம் மனதார வாழ்த்தி வரவேற்கின்றோம். விநாயகமூர்த்தி முரளிதரன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் முக்கிய பொறுப்பு ஒன்றையும் வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.

தற்போது நாட்டின் முற்போக்குக் கட்சிகள், அமைப்புகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே இணைந்து கொண்டுள்ளன.

தமிழர், முஸ்லிம், சிங்களவர் என நம் அனைவரதும் தாய்நாடு இலங்கை. இது எமது நாடு. இந்நாட்டில் பயமின்றி, சந்தேகமின்றி வாழ சூழல் ஏற்படுத்தப்படும்.

இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும். உங்கள் எதிர்காலம், உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் சுபீட்சமானதாக நாம் இணைந்து உருவாக்குவோம் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (50)



தென்னிலங்கையிலிருந்து கடந்த 10ஆம் திகதி ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட உணவுப் பொருள்களை நாவற்குழி களஞ்சியத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மற்றும் செயலகக் கணக்காளர், படை அதிகாரிகள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். *(படங்கள்: பிரபா, ஓங்காரன், தயாளன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு 13.03.2009



யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்

பிரதி அதிபர் திருமதி இராஜேஸ்வரி நவிரெட்ணராஜா S.L.T.S.-I

பெயர்:- இராஜேஸ்வரி நவரெட்ணராஜா
பிறப்பு:- 13.03.1951
இடம்:- கோண்டாவில் (குமரகோட்டம்)

வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம் :- 01.09.71 - 15.10.72
வ/புதுக்குடியிருப்பு ச்.ச்.த.க.பாடசாலை:- 16.10.72-14.01.74
யா/கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை:- 15.01.74-31.12.75
வ/வெளிக்குளம் அ.த.க.பாடசாலை:- 01.01.76-10.02.76
வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்:- 11.02.76-31.12.81
யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்:- 01.01.82-இன்றுவரை

அன்னைக்கு நன்றிகள் பல.....

நாமகளென்னும் நந்தவனத்தில்
நவரெத்தினமாய்த் திகழ்ந்தவரே!
கண்ணியம் மிக்க உம் பணிவாழ்வை
சொல்லினில் வடிக்க முடியாது
நன்னெறிப் பாதையில் நடத்தியதும்
அன்னையின் சிலையை வடித்ததுவும்
எண்ணத்தில் என்றும் நிலைத்து நிற்க
நன்றிகள் பலவும் நவில்கின்றோம்.

**ஆசிரியர் குழாம், மாணவர்கள்,**
**யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்.**

உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...

**சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்**



சாய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மை யாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத்தோற்றத்தை பெற்றுத் தரும்.

சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream

100% herbal

'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO; REG NO. A/L 250.

# 24 ஆவது ஆண்டு நினைவலைகள்



அமரர் துரைசிங்கம்
சரவணன்துரை
(மாணவன், அச்சுவேலி மத்திய கல்லூரி)

மலர்வு 27.04.1971
உதிர்வு 13.03.1985

அன்புமொழி பேசி அனைவரையும் மகிழ வைத்தாய்!
பண்புடனே நீ வளர்ந்து பயன்தருவாய்
என்றிருந்தோம்!
அகவை பதின்மூன்றில் அரனே அழைத்து
விட்டான்
அன்றுமுதல் இன்றுவரை ஆற்றாது அழுகின்றோம்
உன் நினைவால்
ஆண்டு இருபத்துநான்கு ஆனாலும் மீண்டும்
ஒரு தடவை
வாராயோ! எம்மிடத்தே சரவணா! சரவணா!!

"திருச்செந்தூர்",
நாவலம்பதி,
அச்சுவேலி.

அப்பா, அம்மா,
[illegible]
[illegible]

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 13

வலிகாம வலய முறைசாராக் கல்வி பிரிவின் ஏற்பாட்டில் கட்டாயக்கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தரங்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆனைக் கோட்டை முன்பள்ளி கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் பெற்றோர், பிள்ளைகளுக்காக ஆதவன் பாலர் பாடசாலைக் கட்டடத்தில் இடம் பெறவுள்ளது.

இதுபோன்ற கருத்தரங்குகள் உயரப் புலம், இளவாலை, சகாயபுரம், சாந்தை, சாவற்காடு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் நடைபெறவுள்ளதாகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

## கட்டடங்களை அமைப்போர் அனுமதி பெற வேண்டும்

சித்தங்கேணி,மார்ச் 13

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டடங்களை அமைப்போர் முன் அனுமதி பெற வேண்டும் என பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபையின் அறிவுறுத்தல்களை மீறி அனுமதி பெறப்படாமல் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வீதி விஸ்தரிப்பின்போது பல கட்டடங்கள் அகற்ற வேண்டிய நிலை ஏற்படும்.

அத்துடன் நீர் வடிந்தோடும் வடிகால்களை அமைப்பதிலும் சிரமங்கள் ஏற்படும். எனவே கட்டடங்களை அமைப்போர் பிரதேச சபையில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (50-9-112)

### விற்பனைக்கு

86 XXXX தொடரிலக்கமுடைய CD125 TWIN மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 516, தட்டாதெருச் சந்தி, கே.கே.எஸ்.வீதி.
T.P. 222 8036

### தவறிவிட்டது

பலாலி வீதி, வசாவிளான் என்னும் முகவரியைச் சேர்ந்த நவநேசன் குணவதியம்மா என்பவரது தேசிய அ.அட்டை(576402554V) இருபாலைக்கும் கண்டுக் குளிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் டச்றோட், இருபாலை, கோப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
T.P. 0775340639

### அருள்முருகன் திருமணப் பணியகம்

உள்நாடு/வெளிநாடு வைத்தியர்கள், B.Sc, M.Sc, Ph.d பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், அரச பதவியினர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மருத்துவம் உட்பட பல்வேறு பீட இறுதி ஆண்டு மாணவ, மாணவியர், வியாபார உரிமையாளர்கள், PR உடன் வெளிநாடுகளில் உள்ளவர்கள் உட்பட பல மணமக்களின் தெரிவுகள் நேரில்.
03 யாழ்.வீதி, [illegible] (ஆரியகுளம் [illegible]), யாழ்ப்பாணம்.
T.P. 2229334

## கால்வாய்கள் புனரமைப்பு

வண்ணை, மார்ச் 13

கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் சிறுப்பிட்டி கிழக்கில் அமைந்துள்ள தனவள கால்வாய் மற்றும் நல்லூர் பிரதேச பிரிவில் கொக்குவில் நந்தாவிலில் அமைந்துள்ள கால்வாய்கள் ஆகியவற்றை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் புனரமைத்து வருகின்றது.

அப்பகுதி விவசாய மற்றும் தோட்டச் செய்கையாளர்களின் கோரிக்கைக்கு இணங்கி மேற்படி பிரதேச செயலகங்களின் அனுமதியைப் பெற்றே அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இந்தப் புனரமைப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றது. (204-160)

## பயிற்சிப் பட்டறை

சித்தங்கேணி, மார்ச் 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் சுயதொழில் திட்டப் பயனாளிகளுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 17 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதச செயலர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஐ.எல்.ஓ.நிறுவனத்தால் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-112-9)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 . 03 . 1959



உதிர்வு 11 . 02 . 2009

## அமரர் துரையன் தெய்வேந்திரம்

கடந்த 11.02.2009 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (13.03.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## துரைசிங்கம் இராசம்மா



ராஜ வீதி, சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் இராசம்மா 11.03.2009 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும் மயில்வாகனம், கனகசிங்கம், தம்பிராசா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தேவரஞ்சனி, சந்திரசாந்தா (சுவிஸ்), இரத்தினமாலா (சுவிஸ்), இரத்தினராஜா (சுவிஸ்), மோகனராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் தனபாலசிங்கம் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஸ்ரீரஞ்சனி (சுவிஸ்), சுமதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும் ரமேஷ்குமார், இளையராஜா - விஜயதாரணி, சிவானந்தன் - சுகிர்தா, தனுஷியா, தனுஷியன், தர்சிகா, ஆத்மிகன், டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கீர்த்தனா, ஜொனேஜினி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.03.2009) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி மேற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (83474)

தகவல்:
பிள்ளைகள்.

## இராசேந்திரன் பரமேஸ்வரி

ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரன் பரமேஸ்வரி நேற்று (12.03.2009) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்- சொர்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசேந்திரத்தின் (ஓய்வுபெற்ற இலிகிதர், கொக்குவில், நல்லூர் கிராமசபை) பாசமிகு மனைவியும் மகாதேவா, மாணிக்கவாசகர், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் மகேஸ்வரி, சுப்பிரமணியம், சந்திரசேகரம், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் இராசேந்திரம், மகேஸ்வரன், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணேஸ்வரி, செல்வகுமார் (பிரான்ஸ்), இராஜேஸ்வரி (தயானந்தன் ரீச்சர், ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி), யோகேஸ்வரி (ஆசிரியை, ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை), புஸ்பராணி (சுவிஸ்), ஜெயராணி (ஆசிரியை, பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் பிரதாபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவு, யாழ்.மாநகர சபை), குமுதினி (பிரான்ஸ்), தயானந்தன் (ஆசிரியர், தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), பாலசுப்பிரமணியம் (வியாபாரம்), விமல்ராஜ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் வித்தியகலாவின் (ஆசிரியை கொக்குவில் ஸ்தான C.T.M.) பெரிய தாயும் குருபரன் (2010 கணிதப்பிரிவு, கொக்குவில் இந்துக் கல்லூரி), சூரிய பிரகாஷ் (தரம்-9, கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜக்சன், நிரூஜன் (பிரான்ஸ்) தேவதயாராஜ் (கொக்குவில் இந்துக் கல்லூரி), அனோஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), விஷ்ருதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), தாட்சாயினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜக்சாயினி, கோபிகன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), விபியன், விபித்திரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு. (83475)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொடிகாமம் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேக நிகழ்வின்போது ஆலய பிரதமகுரு ஆலய தூபிக்கு கும்பநீரால் (நீரை ஊற்றுவதையும்) அபிஷேகம் செய்வதையும் ஆலய மூலமூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் செய்வதற்கு குருமார் கும்பங்களை தாங்கி வீதி உலா வருவதையும் காணலாம். (படங்கள்: அருணன்)



மீசாலை வடக்கு, கொடிகாமம் இராமாவில் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற மகா சிவராத்திரி விழாவில் முருகப் பெருமான் வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: கமலாம்பிகை)



கோப்பாய் சாந்திலிங்கேஸ்வரர் ஆலய பாற்குட அபிஷேகம் நடைபெற்றபோது ஸ்ரீ கற்பகவிநாயகராலயத்திலிருந்து பக்த அடியார்கள் பாற்குடங்களை மேள, தாள வாத்தியங்களுடன் ஊர்வலமாக எடுத்துவந்தனர். பாற்குட பவனி இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம் (218)



அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற அபிராமிப்பட்டர் விழாவில் சுவாமி வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்: எஸ். கதிரவேலு)

# மாத்தறையில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 13

மாத்தறை அக்குரசப் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட, காயப்பட்டவர்களுக்கு முதற்கட்ட நஷ்ட ஈட்டுத் தொகை நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

மரணமானவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்பட்டதாக மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரணத்துறை அமைச்சர் நிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, போக்குவரத்துத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோருடன் தானும் வைத்தியசாலையில் காயப்பட்டவர்களைப் பார்வையிட்டதோடு இறந்தவர்களின் வீடுகளுக்கும் சென்றதாக அவர் மேலும் தெரிவித்தார். (50-7)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மார்ச் 13

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பெரிய புராணம் காட்டும் சைவ நெறி என்னும் தலைப்பில் யாழ். புதிய உயர் கலைக் கல்லூரி அதிபர் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் சொற்பொழிவாற்றுவார். (50-236)

* * *

வடமராட்சி, மார்ச் 13

அல்வாய் வடக்கு, சக்கோட்டை புனித சவேரியார் தேவாலய வருடாந்த பெருந் திருவிழா கடந்த 4ஆம் திகதி புதன்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து இடம்பெற்று வரும் நவ நாள் ஆராதனையைத் தொடர்ந்து நேற்று 12ஆம் திகதி வியாழக்கிழமை நற்கருணைப் பெருவிழா நடைபெற்றது.

இன்று 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.மாவட்ட குரு முதல்வர் அருட்திரு யஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுப்பதுடன் வருடாந்த உற்சவம் நிறைவுறும். (50-236)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 13

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நிகழ்வு எதிர் வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 7ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

## வலய மட்ட மெய்வன்மை தெரிவுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான வலயமட்ட மெய்வன்மைத் தெரிவுப் போட்டிகள் இரு கட்டங்களாக நடத்தப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி மைதானத்திலும் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (204-207)

# பிரதம தபாலகத்தில் நாணயக் குற்றி தொலைபேசிச் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.பிரதம தபாலகத்தில் நாணயக் குற்றிகளைப் பயன்படுத்தி அழைப்புப் பெறும் தொலைபேசி சேவை நிறுத்தப் பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசியில் அடிக்கடி தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு பழுதடைவதாலேயே இச்சேவை நிறுத்தப் பட்டதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் இந்தத் தொலைபேசி மூலம் சேகரிக்கும் பணத்தை விட அதற்கான மாதாந்தக் கொடுப்பனவு கூடுதலாக உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

பொதுமக்கள் மற்றும் அரச பணியாளர்களின் வசதி கருதி அஞ்சல் தொடர்பு உத்தியோகஸ்தர் சங்கத்தின் யாழ்.கிளையினரே இச்சேவையை நடத்தி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

## எமது எண்ணங்களுக்கு நாமே பொறுப்பாளிகள்

### ஞானக்கதிர்

நமது மனதில் நல்ல எண்ணங்களும் உண்டாகும். சில சமயங்களில் கெட்ட எண்ணங்களும் தோன்றும். இரண்டுக்குமே தெரிந்தோ தெரியாமலோ நாம்தான் பொறுப்பாளி. நாம் வெளிப்படையாகச் சொல்லும் ஆசைகள் நல்லெண்ணங்களாக உருவெடுக்கின்றன. நாம் இரகசியமாக மனதில் வைத்துக்கொள்ளும் கெட்ட ஆசைகள் தீய எண்ணங்களாக வடிவெடுக்கின்றன. இரவு வந்துவிட்டால் நாம் இருட்டிவிட்டதே என்று கவலைப்படுவதில்லை. ஒரு விளக்கை எடுத்துக் கொண்டுவந்தால் போதும். இருள் தானாகவே விலகிவிடும். அதேபோல நல்லெண்ணங்களுக்கு முக்கியமான இடம் கொடுக்கப் பழகினால் தீயவை தானாகவே ஓடிப்போய்விடும்.

எது நல்லது? எது கெட்டது? நாம் அதன்மூலம் பெறும் உணர்ச்சியைப் பொறுத்துத்தான் அது அமைந்திருக்கிறது. என்னிடம் தோன்றும் எண்ணம் என்னைப் பற்றிய தற்பெருமையை பிறரிடம் பொறாமையை என்னுடைய சுயநலத்தைத் தூண்டி விட்டால் அவை கெட்டவை. என்னிடம் ஏற்படும் எண்ணங்கள் பிறருடைய நன்மைக்காகச் சேவை செய்யும்படி என்னை எளியவனாக நினைக்க உதவும்படி என்னுடைய செயலினால் யாருக்கும் கெடுதல் ஏற்படாதபடி செய்வதனால் அவை நல்லவைதான்..

எனக்கு எல்லாம் வேண்டும் - இன்னும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருப்பவன். எவ்வளவு செல்வங்களைப் பெற்றிருந்தாலும் ஏழைதான். எனக்கு எதுவும் வேண்டாம். என்னிடம் இருக்கும் சிறிதளவையும் பிறருக்காகக் கொடுத்து விடுவேன் என்று சொல்லிச் செயல்படுபவன். அதிகம் இல்லாதவனானாலும் பணக்காரன்தான். ஆகவே, நாம் உலகத்தில் சுவைப்பவை, தொடுபவை, பார்ப்பவை, உணர்பவை ஒவ்வொன்றையும் ஆண்டவன்தான் கொடுத்தான் என்பதை உணர்ந்துகொள்வோம். அவற்றைச் சுயநலத்துக்குப் பயன்படுத்தாமல் பிறருக்கு உதவும் சேவையில் ஈடுபடுத்துவோம். அப்போது நம்முடைய எண்ணங்கள் எல்லாமே புனிதமாகிவிடும்.

இப்படி நம்மை நாமே மாற்றிக்கொள்வதுதான் புதிதாக உருவாக்கிக்கொள்வதுதான் Re-Creation நாம் பொதுவாக வழங்குவதைப் போல அது பொழுதுபோக்கு அல்ல. புதியபோக்கு இப்படி வாழ்ந்து எல்லாவற்றையுமே உலக நன்மைக்காகக் கொடுப்பவர்கள்தாம் நமது பெரியோர்கள், ஆச்சார்ய புருஷர்கள், தீர்க்கதரிசிகளான ஞானிகள், அவர்கள் எதையுமே தமக்கு என்று வைத்துக்கொண்டதில்லை. ஆனால், உலகமே அவர்கள் பின்னால் அடிபணிந்து போய்க்கொண்டிருக்கிறது.

கடவுள் நமக்கு உடலைக் கொடுத்தார். அதில் உள்ளத்தையும்கொடுத்தார். இரண்டுமே நமக்குப் பிறவியில் கிடைத்த சாதனங்கள்தாம். ஆனால், அவற்றை வைத்துக் கொண்டு நம்மை நாமே புதிதாக இப்படி உருவாக்கிக் கொள்கின்றோம் அல்லவா? அதுதான் நம் கையில் இருக்கிறது. ஒரே முயற்சி சுய நலத்துக்காக அமையும்போது தீய எண்ணம் ஆகிவிடுகிறது. அதுவே பொதுநலத்துக்காக அமையும்போது நல்ல எண்ணம் ஆகிவிடுகிறது. இப்படி முயற்சியைத் திசை திருப்பிக் கொள்ளும் நோக்கை மாற்றி அமைத்துக்கொள்ளும் திறமை நம்மிடம்தான் இருக்கிறது. அதை வளர்த்து நாம் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- " அன்பினால் உலகையே வெல்ல முடியும் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்
# EASY WAY TO ENGLISH

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA
(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

## Last week continuity.....

மேற்காணும் அட்டவணைச் சொற்கள் வினாவாக்கியங்களாக பின்வருமாறு தோன்றும்.

| எதிர்மறை | எதிர்மறை வினா |
|---|---|
| 01. I am not | Am I not? |
| நான் இல்லை | தான் இல்லையா? |
| 02. You are not | Are you not? |
| நீ இல்லை | நீ இல்லையா? |
| 03. We are not | Are we not? |
| நாங்கள் இல்லை | நாங்கள் இல்லையா? |
| 04. Thry are not | Are they not? |
| அவர்கள் இல்லை | அவர்கள் இல்லையா? |
| 05. He is not | Is he not? |
| அவன் இல்லை | அவன் இல்லையா? |
| 06. She is not | Is she not? |
| அவள் இல்லை | அவள் இல்லையா? |
| 07. It is not | Is it not? |
| அது இல்லை | அது இல்லையா? |

### Past Tense - இறந்த காலம்

| | | Question - கேள்வி | | Short Answer - சிறுபதில் | | |
|---|---|---|---|---|---|---|
| I She He It | was | WAS | I? She? He? It? | Yes | I She He It | Was |
| You We They? | were | WERE | You? We? They? | | You We They | Were |

| | | |
|---|---|---|
| 01. I was | Was I? | Yes, I was |
| நான் இருந்தேன் | நான் இருந்தேனா? | ஆம், நான் இருந்தேன் |
| 02. He was | Was he? | Yes, he was |
| அவன் இருந்தான் | அவன் இருந்தானா? | ஆம், அவன் இருந்தான் |
| 03. She was | Was she? | Yes, she was |
| அவள் இருந்தாள் | அவள் இருந்தாளா? | ஆம், அவள் இருந்தாள் |
| 04. It was | Was it? | Yes, it was |
| அது இருந்தது | அது இருந்ததா? | ஆம், அது இருந்தது |
| 05. You were | Were you? | Yes, you were |
| நீ இருந்தாய் | நீ இருந்தாயா? | ஆம், நீ இருந்தாய் |
| 06. We were | Were we? | Yes, were we |
| நாங்கள் இருந்தோம் | நாங்கள் இருந்தோமா? | ஆம்,நாங்கள் இருந்தோம் |
| 07. They were | Were they? | Yes, they were |
| அவர்கள் இருந்தார்கள் | அவர்கள் இருந்தார்களா? | ஆம் அவர்கள் இருந்தார்கள் |

| எதிர்மறை | எதிர்மறை வினா |
|---|---|
| 01. I was not | Was I not? |
| நான் இருக்கவில்லை | நான் இருக்கவில்லையா? |
| 02. He was not | Was he not? |
| அவன் இருக்கவில்லை | அவன் இருக்கவில்லையா? |
| 03. She was not | Was she not? |
| அவள் இருக்கவில்லை | அவள் இருக்கவில்லையா? |
| 04. It was not | Was it not? |
| அது இருக்கவில்லை | அது இருக்கவில்லையா? |
| 05. You were not | Were you not? |
| நீ இருக்கவில்லை | நீ இருக்கவில்லையா? |
| 06. We were not | Were we not? |
| நாங்கள் இருக்கவில்லை | நாங்கள் இருக்கவில்லையா? |
| 07. They were not | Were they not? |
| அவர்கள் இருக்கவில்லை | அவர்கள் இருக்கவில்லையா? |

அடுத்து நாம் ஓர் இறந்தகால நிலையில் உள்ள அட்டவணையைப் பார்ப்போம். இவ் அட்டவணையில் இருந்து எத்தனை வாக்கியங்களை உருவாக்க முடியும் என்பதையும் பார்ப் போம். மாணவர்களே நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஆங்கில வாக்கியங்களை உருவாக்கக் கற்றுக் கொள்கிறீர்களோ அது அவ்வளவுக் கவ்வளவு உங்கள் ஆங்கில வளத்தினை அதிகரிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| I | நான் | | |
| He | அவன் | Wasn't | Waiting |
| She | அவள் | இருக்கவில்லை | காத்திருத்தல் |
| It | அது | | |
| You | நீ/நீங்கள் | | |
| We | நாங்கள் | Weren't | Waiting |
| They | அவர்கள் | இருக்கவில்லை | காத்திருத்தல் |

### Present continuous /நிகழ்காலத் தொடர்

**I am doing - நான் வேலை செய்துகொண்டிருக்கிறேன்**

| | | | |
|---|---|---|---|
| I am working. | Am I working? | I am not working. | Am I notworing? |
| நான் வேலை செய்துகொண்டு இருக்கிறேன். | நான் வேலை செய்துகொண்டு இருக்கிறேனா? | நான் வேலை செய்துகொண்டு இருக்கவில்லை. | நான் வேலை செய்துகொண்டு இருக்கவில்லையா? |
| He is eating. | Is he eating? | He is not eating. | Is he not eating? |
| அவன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறான். | அவன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறானா? | அவன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கவில்லை. | அவன் சாப்பிட்டுக் கொண்டு இருக்கவில்லையா? |
| It is running. | Is it running? | It is not running. | Is it not running? |
| அது ஓடிக்கொண்டு இருக்கிறது. | அது ஓடிக்கொண்டு இருக்கிறதா? | அது ஓடிக்கொண்டு இருக்கவில்லை. | அதுஓடிக்கொண்டு இருக்கவில்லையா? |
| You are working. | Are you working? | You are not working. | Are you not working? |
| நீ/நீங்கள் வேலை செய்துகொண்டு இருக்கிறாய்/ இருக்கிறீர்கள். | நீ/நீங்கள் வேலை செய்துகொண்டு இருக்கிறாயா?/ இருக்கிறீர்களா? | நீ/நீங்கள் வேலை செய்துகொண்டு இருக்கவில்லை. | நீ/ நீங்கள்வேலை செய்துகொண்டு இருக்கவில்லையா? |
| You are writing. | Are you writing? | You are not writing. | Are you notwriting? |
| நீ/நீங்கள் எழுதிக்கொண்டு இருக்கிறாய்/ இருக்கிறீர்கள். | நீ/நீங்கள் எழுதிக்கொண்டு இருக்கிறாயா? இருக்கிறீர்களா? | நீ/நீங்கள் எழுதிக்கொண்டு இருக்கவில்லை. | நீ/நீங்கள் எழுதிக்கொண்டு இருக்கவில்லையா? |
| We are playing. | Are we playing? | We are not playing. | Are we not playing? |
| நாங்கள் வி.கொண்டு இருக்கிறோம். | நாங்கள் வி.கொண்டு இருக்கிறோமா? | நாங்கள் வி.கொண்டு இருக்கவில்லை. | நாங்கள் வி.கொண்டு இருக்கவில்லையா? |
| They are studying. | Are they studying? | They are not studying. | Are they not studying? |
| அவர்கள் படித்துக்கொண்டு இருக்கிறார்கள். | அவர்கள் படித்துக்கொண்டு இருக்கிறார்களா? | அவர்கள் படித்துக்கொண்டு இருக்கவில்லை. | அவர்கள் படித்துக்கொண்டு இருக்கவில்லையா? |

### Helping Verbs - உதவி வினைச்சொற்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Be | Am | Is | Are | Was | Were |
| Do | Does | | | Did | |
| Has | Have | | | Had | |
| Will | Shall | | | Been | |

ஆங்கிலத்தில் காலங்களின் தன்மையைக் காட்டுவதற்கு உதவி வினைச்சொற்கள் அவசியம் ஆகும். தமிழ் அல்லது சிங்களத்தைப்போல் அல்லாமல் ஆங்கிலத்தில் பயனிலையைக் காட்டும் அல்லது செயலைக் குறிக்கும் சொற்கள் வசனத்தின் மத்தியில் வரும்.

| Subject | | |
|---|---|---|
| I | saw | an elephant |
| நான் | ஒரு யானையைக் | கண்டேன் |

### Personal Pronouns - Object form
பிரதியீட்டுப் பெயர்ச்சொற்கள் - செயற்படுபொருள் முறையில்

| Subject form எழுவாய் வடிவம் | Object form செயற்படுபொருள் வடிவம் | உடைமைப் பெயர்ச்சொல் வடிவம் |
|---|---|---|
| I - நான் | me - எனக்கு | my, mine - என்னுடைய, எனது |
| We - நாங்கள் | us - எங்களுக்கு | our, ours - எங்களுடைய,எங்களுடையது |
| You - நீ | you- உனக்கு | your,yours-உன்னுடைய,உன்னுடையது |
| He - அவன் | him - அவனுக்கு | his - அவனுடை |
| She- அவள் | her - அவளுக்கு | hers - அவளுடைய |
| It - அது | it - அதற்கு | its - அதனுடைய |
| They- அவர்கள் | them - அவர்களுக்கு | their, theirs - அவர்களுடைய அவர்களுடையது |

**Part of Be**
**Be - வினைச்சொல் வகை**

| | | | |
|---|---|---|---|
| Be - நிகழ்காலத்தில் | Am | Is | Are |
| Be - இறந்தகாலத்தில் | Was | Were | |
| Be - எதிர்காலத்தில் | Will be | Shall be | |

| | | | | |
|---|---|---|---|---|
| I am | I'm நான் இருக்கிறேன். | Am I? நானா? | I am not. நானில்லை. | Am I not? நானில்லையா? |
| He is | He's அவன் இருக்கிறான். | Is he? அவனா? | He is not. அவனில்லை. | Is he not? அவனில்லையா? |
| They are | They're அவர்கள் இருக்கிறார்கள். | Are they? அவர்களா? அவைகளா? | They are not. அவர்களில்லை. அவைகளில்லை. | Are they not? அவர்களில்லையா? அவைகளில்லையா? |
| You are | You're நீ இருக்கிறாய். | Are you? நீரா? நீங்களா? | You are not. நீர் இல்லை. நீங்கள் இல்லை. | Are you not? நீர் இல்லையா? நீங்கள் இல்லையா? |
| It is | It's அது இருக்கிறது. | Is it? அதுவா? | It is not. அது இல்லை. | Is it not? அது இல்லையா? |

| | |
|---|---|
| 01. My name is Santhuru. | என்னுடைய பெயர் சந்துரு. |
| 02. My sister's name is Ramya. | என்னுடைய சகோதரியின் பெயர் ரம்யா. |
| 03. I am in Sri Lanka. | நான் இலங்கையில் இருக்கிறேன். |
| 04. I am a student. | நான் ஒரு மாணவன். |
| 05. You are late again. | நீ திரும்பவும் பிந்திவிட்டாய். |
| 06. We are good friends. | நாங்கள் நல்ல சிநேகிதர்கள். |
| 07. Your keys are on the table. | உனது திறப்புகள் மேசைமேல் உள்ளன. |
| 08. I am tired but, I, am not happy. | நான் களைத்துவிட்டேன், ஆனால் நான் மகிழ்ச்சியாக இல்லை. |
| 09. Those people aren't Sinhalese. | அந்த மக்கள் சிங்களவர்கள் அல்லர். |

Continued next week....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## கபிலா செளந்தர்ராஜா
பெறுபேறு: 2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



கலைத்துறையில் இருந்த அதீத ஈடுபாடு குறிப்பாகத் தமிழ்ப் பாடத்தில் இருந்த ஈடுபாடு காரணமாக்வே கலைத்துறையை நான் தெரிவுசெய்தேன்.

நான் இப்பெறுபேறு பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், நண்பிகள் மற்றும் உறவினர்கள் குறிப்பாக எனது மாமா ஆகியோரும் உறுதுணை வழங்கினார்கள். இவர்களுக்கு நன்றி கூறுவதுடன் இறைவன் திருவருளுக்கும் நன்றியுடன் தலைவணங்குகிறேன். பரீட்சையை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம் என்ற மனப்பயம் ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் ஆசிரியர்கள் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி படித்தபொழுது அவை தானாக நீங்கியது. பரீட்சை எழுதும் பொழுது எனது அப்பா சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். ஆனாலும் எனது இலட்சியம் மீதிருந்த வைராக்கியம் என்னைத் தளரவிடவில்லை.

என்னை யாரும் படிபடி என்று வற்புறுத்தவில்லை. நானாக எனது குடும்ப நிலை உணர்ந்து படித்தேன். படிக்கும் பாடங்களில் குறிப்பு எடுத்து படிப்பதுடன், பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் நடைபெறும் பரீட்சைகளில் தவறாது கலந்துகொள்வேன். மேலதிகமாகத் தேவைப்படும் விடயங்களைப் பாடசாலை நூலகத்திலிருந்து பெற்று அவற்றைக் கற்பேன்.

பரீட்சைக்குப் பாடங்களை ஆயத்தம் செய்யும்போது பாடசாலை ஆசிரியர்களும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களும் மிகவும் வழிகாட்டினார்கள். கடந்தகால வினாக்களைத் தொகுத்து அவற்றின்மூலம் வழிகாட்டினார்கள். இதனால் எதிர்பார்த்த வினாக்கள் பரீட்சையில் வந்தன.'

எதிர்காலத்தில் நல்ல பண்பும் கண்ணியமும் நிறைந்த புரிந்துணர்வுமிக்க, சமூகநல நோக்குடைய கல்விச் சமூகத்தை உருவாக்கும் உன்னத விரிவுரையாளராக வரவேண்டும் என விரும்புகிறேன்.

எனது இப்பெறுபேற்றுக்கு குருவருளும், திருவருளும் அருட்கடாட்சம் புரிந்ததுடன் பெற்றோரின் நல்லாசியும் அவர்களுடைய அர்ப்பணிப்புகளுமே எனது இந்தப் பெறுபேற்றுக்குப் பிரதான காரணம் என நினைக்கிறேன்.

## மாதுரி ஸ்ரீபாலன்
பெறுபேறு: ஏ2பி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



உயிரியல் துறையில் கற்க வேண்டும் என்ற அதிக விருப்பம் சிறு வயதில் இருந்ததால் அத்துறையினைத் தெரிவு செய்தேன்.

பெற்றோர், பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் என்னுடைய பாடத்தெரிவுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள். அத்துடன் எனது வெற்றிக்கும் தம்மாலான பங்களிப்பை நல்கினார்கள். மூன்று பாடங்களிற்கும் சம அந்தஸ்துக் கொடுத்துப் படித்தேன். கிடைக்கும் நேரங்களை வீணடிக்காமல் படிப்பதற்கு மட்டும் செலவிட்டேன். சில வினாக்கள் மட்டுமே எதிர்பார்த்தபடி வந்தன.

இப்பெறுபேற்றைப் பெறுவதற்குப் பெற்றோர், ஆசிரியர்களின் ஆதரவும், ஆசீர்வாதமுமே முக்கிய காரணமாகும். எந்த விடயத்திலும் நம்மை அர்ப்பணித்து, நம்பிக்கையுடன் செயற்பட்டால் நிச்சயமாக வெற்றி கிடைக்கும்.

## நிலாயினி சந்திரபோஸ்
பெறுபேறு: 2ஏபி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)



நான் எனது ஆரம்பக்கல்வியை தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் கற்றேன். தரம் 6 இல் இருந்து உயர்தரம் வரை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்றேன். சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் எனக்குத் திருப்தியாக இருக்கவில்லை. இதனால் உயர்தரப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைய வேண்டும் என விடாமுயற்சியோடு முயன்றேன். அதற்காக தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். நான் உயர்தரத்தில் மூன்று வருடங்கள் கற்கவில்லை. தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒன்றரை வருடங்கள் என்னால் கற்றலைத் தொடர முடியவில்லை. இதனால் 6 மாதம் மாத்திரமே கற்றேன். சிறு வயதிலேயே நான் தந்தையை இழந்துவிட்டேன். ஆனால் எனது அம்மா எனது கல்விக்காகத் தன்னையே அர்ப்பணித்தார். 6 மாதத்தில் உன்னால் கல்வியில் திறமை காட்ட முடியாது என்று சொன்னவர்களின் வார்த்தைக்குச் சவாலாக நான் படிக்க வேண்டும் என்று அதிக கஷ்டப்பட்டேன். அதன் பயனே நான் பல்கலைக்கழகம் செல்வதற்கு எனது பெறுபேறு கிடைத்தது. எனது அம்மாவின் ஊக்குவிப்பும், ஒத்துழைப்பும் எனக்கு உறுதுணையாக இருந்தது. என்னிடம் குறிப்புக் கொப்பிகள் எதுவும் இருக்கவில்லை. எனது நான்கு நண்பிகளே அனைத்துக் கொப்பிகளையும் தந்து எனக்கு வழிகாட்டினார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். அளவையியல் பாடம் எனக்கு விளங்காது இருந்தபோதும் எனது நண்பியான சுமதியே எனக்கு முழுப் பாடத்தையும் கற்பித்தார். அம்மா என்னைப் பல இன்னல்களின் மத்தியில் திறமையாகக் கற்பித்தார். எனவே எனது அம்மாவின் விருப்பத்திற்காகவும் அவரின் நன்றிக்கடனுக்காகவும் நான் பல்கலைக்கழகம் சென்று சிறப்பாகக் கற்றுச் சிறந்த ஆசிரியராக வெளியேற வேண்டும் என்பதே எனது இலட்சியம். இதற்காக எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பிகள் மற்றும் எனது அம்மாவிற்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## யேசிகா சற்குணநாதன்
பெறுபேறு: 2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



எனக்கு ஆரம்பத்திலேயே அதிக ஈடுபாடும் ஆர்வமும் காணப்பட்டமையால் கலைத்துறையைத் தெரிவுசெய்தேன். பல்வேறு ஆசிரியர்களின் ஆலோசனைகள், வழிகாட்டல்களின் அடிப்படையில் பொருளியல், புவியியல், தமிழ் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்து கற்றேன்.

எனது இந்த உயர்ந்த பெறுபேறைப் பெற்றுக்கொள்ள பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் நண்பிகள் உறுதுணையாக இருந்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் அருளும் எனக்குக் கைகூடி இருந்தது.

நான் உயர்தரம் படித்துக்கொண்டிருக்கும் வேளையில் எனது தந்தையாரை இழந்துவிட்டேன். இருப்பினும் அந்த இழப்பை எல்லாம் ஈடுசெய்து தொடர்ந்து நான் திறமையாகப் படிப்பதற்கு எனது ஆசிரியர்களும், நண்பர்களும், சகோதரர்களும் துணைபுரிந்தனர்.

பாடசாலையிலும், கல்வி நிலையங்களிலும் தினம் தினம் படிக்கும் விடயங்களை அன்றே வீட்டில்கற்றேன். இதனை விட கடந்தகால பரீட்சை வினாக்கள், வேறு பரீட்சை வினாத்தாள்கள் என்பனவற்றை முழு ஈடுபாட்டுடன் பயிற்சித்துப் பார்த்தமை என்பன சிறப்பான பெறுபேற்றினைப் பெற வழிகாட்டியாக இருந்தன.

புவியியல், தமிழ் ஆகிய பாடங்களில் எதிர்பார்த்த வினாக்கள் பரீட்சை எழுதியபோது வந்தன. நான் 3ஏ சித்தியை எதிர்பார்த்து காத்திருந்தேன். ஆனால் 2ஏபி பெறுபேறு கிடைத்தையிட்டு சற்று ஏமாற்றத்தை எதிர்நோக்கினேன். இருப்பினும் மாவட்ட நிலை 41 என எண்ணிப் பார்க்கும்போது மகிழ்ச்சியளித்தது.

எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தில் பொருளியலைச் சிறப்புப் பாடமாகப் பயின்று பொருளியல் நிபுணராக வர விரும்புகி றேன்.

## லூர்ட்ஸ்மேரி றோசலின் சிவலிங்கம்
பெறுபேறு: 3ஏ (இளவாலை கன்னியர் மடம் ம.வி.)



நான் தரம் 2இல் இருந்து தரம் 13வரை இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். இப்பாடசாலை நான் கல்வியிலும், நல்லொழுக்கத்திலும், இறைபக்தியிலும் சிறந்து விளங்கக் காரணமாக அமைந்தது. இங்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் பங்களிப்பும் எனக்கு உறுதுணையாய் இருந்தது. நான் சாதாரண தரத்தில் 8டிஸ்ரிங்ஷன் பெறுபேற்றைப் பெற்று நான் விரும்பிய வர்த்தகத்துறையைத் தெரிவு செய்தேன்.

நான் அன்றாடம் வகுப்பில் கற்கும் பாடங்களை அன்றே படித்துவிடுவேன். அதில் தெளிவின்மைகள் ஏற்படும்போது அதை ஆசிரியர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வேன். எனக்குப் பரீட்சை நெருங்கும்போது பயமும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அவ்வேளைகளில் எல்லாம் எனக்கு உறுதுணையாக இருந்து, அறிவுரை வழங்கி வழிகாட்டிய பெற்றோரை என்றுமே மறக்கமுடியாது. நான் சிறந்த பெறுபேற்றைப் பெற உதவிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், சக மாணவிகள் ஆகியோரை இந்த நேரத்தில் நன்றியோடு நினைவு கொள்கிறேன். மேலும் இறைவனில் நம்பிக்கை வைத்து அயராது முயற்சி செய்தால் வெற்றி அடைய முடியும் என்பது நான் கண்ட அனுபவம்.

எனவே எதிர்காலத்தில் நல்ல ஒரு முகாமையாளராகி எனது பெற்றோருக்கும், சகோதரர்களிற்கும், சமூகத்திற்கும் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

## சுகன்ஜா செல்வானந்தன்
பெறுபேறு: ஏ2பி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)



எனது ஆரம்பக் கல்வியை அச்சுவேலி மகா வித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி ஆகியவற்றில் கற்றேன். பின்னர் தரம் 6 இல் இருந்து மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கற்று வருகின்றேன். எனது தந்தை வே.செல்வானந்தன், தாய் செ.மேரி கலாவதி, அண்ணா, தங்கை ஆகியோர் சிறு வயதிலிருந்தே எனது கல்விக்காகப் பெரும் பாடுபட்டு நான் ஒரு வைத்தியராக வரவேண்டும் என மிகவும் எதிர்பார்த்தார்கள். எனது கல்விக்கு எமது பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோர் பங்காற்றினார்கள். அவர்களுக்கு நான் என்றென்றும் கடமையுணர்வோடு நன்றிகளைத் தெரிவிப்பவளாக உள்ளேன். நான் இரசாயனவியலில் 'ஏ' பெறுபேற்றினை எதிர்பார்த்தேன். ஆனால் 'பி' கிடைத்தமை எனக்கு மிகுந்த கவலை அளித்ததோடு எனது பாட ஆசிரியரையும் கவலைக்கு உள்ளாக்கியவளாகவிட்டேன். தற்போது நான் எனது பெறுபேற்றால் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குக் கிடைக்கவிருக்கும் ஏதேனும் மருத்துவத்துறையினைத் தெரிவுசெய்து எதிர்காலத்தில் இந்தச் சமூகத்திற்கு நற்சேவை ஆற்றுவேன் என நம்புகிறேன்.

## ரம்மியா சிவராஜசுந்தரம்
பெறுபேறு: ஏ2பி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



அம்மாவின் விருப்பத்தின்படி உயிரியற்றுறையினைத் தெரிவுசெய்தேன். என்னுடைய வெற்றிக்கு எனது தாய், தந்தை, சகோதரிகள், கற்பித்த ஆசிரியர்கள் காரணம். குறிப்பிடும்படியாக எந்தச் சிக்கல்களையும் ஏற்படவில்லை. சிக்கல்கள் ஏற்பட்டபோது அவற்றைத் தீர்க்க உதவியது இறைவழிபாடுதான். நான் படிக்கும் காலங்களில் நீண்டநேரம் நித்திரை விழித்துப் படித்தேன். அப்போது எனது பெற்றோரும் சகோதரியும் பெரிதும் உதவினர். பெரும்பாலும் முழுமையான பாடத்திட்டத்தைத் தயார்செய்து கொண்டுதான் பரீட்சை எழுதினேன். இந்தப் பெறுபேறு நான் எதிர்பார்த்தது தான். மேலும் எனக்கு கல்வியில் ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள் எல்லோரையும் இந்தச் சந்தோஷக் கணத்தில் நினைவில் கொள்கிறேன். எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வர வேண்டும் என்பதே எனது இலட்சியம்.

## யாளினி சிவராஜா
பெறுபேறு: 3ஏ (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



கலைத்துறையில் இருந்த ஆர்வம் காரணமாகவும் குறிப்பாகப் புவியியல் பாடத்தில் இருந்த அதீத ஈடுபாடு காரணமாகவும் இத்துறையை நான் தெரிவுசெய்தேன்.

நான் சிறப்பான பெறுபேற்றினைப் பெறுவதற்கு எனது தாயார், சகோதரி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் எனது நண்பிகள் குறிப்பாக சுஜந்தி ஆகியோர் உறுதுணை புரிந்தனர். பரீட்சைக்குத் தோற்றும் காலப்பகுதியில் எனக்கு அதிக மனப்பயம் ஏற்பட்டது. செய்முறைப் புவியியலில் எனக்கு நேரப்பிரச்சினை ஏற்பட்டது. ஆயினும் இதனைக் கருத்திற்கொண்டு சூழற் புவியியல், மானிடப் புவியியலைச் சிறப்பாகச் செய்து முடித்தேன். நாம் படித்தவற்றைப் பாடசாலை மற்றும் தனியார் கல்வி நிறுவன நண்பிகளிடையே பகிர்ந்துகொள்வேன். ஓய்வுநேரங்களில் குழுவாகக் கற்றல் செய்முறையை மேற்கொண்டோம். இதனால் ஒருவருக்குத் தெரியாததை ஒருவர் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது. இவை சிறப்பான பெறுபேற்றுக்குக் காரணமாக அமைந்தன.

பாடசாலைக் குறிப்புகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனக் குறிப்புகள் இதை விட நூலகக் குறிப்புகள் என்பவற்றைத் திரட்டி ஆழமாகக் கற்றேன்.

ஆனால் நான் எதிர்பார்த்தற்கு மாறாக வினாக்கள் இலகுவாகவே அமைந்தன. பரீட்சை எழுதி முடிந்ததும் இத்தகைய பெறுபேற்றை முன்கூட்டியே எதிர்பார்த்தேன். எதிர்காலத்தில் ஒரு விரிவுரையாளராக வர விரும்புகிறேன். விடாமுயற்சியும் நினைத்ததை அடையவேண்டும் என்ற குறிக்கோளும் இருந்தால் எதையும் சாதிக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் அருள் இருந்தமையால்தான் என்னால் இப்பெறுபேற்றைப் பெற முடிந்தது.

சந்திப்பும், படங்களும்:
ஒலண்யன்,
கணேசமூர்த்தி.
35

## திவ்வியவர்த்தனி கைலாயநாதன்
பெறுபேறு: 2ஏபி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



நான் கலைத்துறையையே தெரிவுசெய்தேன். கலைத்துறையிலுள்ள பாடங்களான புவியியல், தமிழ் என்பன எனக்கு மிகவும் பிடித்த காரணத்தால் நான் கலைத்துறையை விரும்பித் தெரிவு செய்தேன்.

எனது பெற்றோர் மிகவும் ஊக்கமளித்தனர். எனது ஆசிரியர்களான திருமதி உதயகுமார், திருமதி பிரியா, திருமதி புஸ்பநாதன் ஆகிய ஆசிரியர்களும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும் எனது வெற்றிக்கு உறுதுணை புரிந்தனர். பாடங்களில் சந்தேகங்களேற்படும் போது நான் ஆசிரியர்களை அணுகிச் சந்தேகங்களைத் தீர்த்தோடு தெளிவுபடுத்திக்கொள்வேன்.

அன்றாடம் கற்றவற்றை அன்றே கற்பின் பரீட்சை நெருங்குகையில் பதற்றம் ஏற்படமாட்டாது. சிறுகுறிப்புகள் எடுத்து கற்பது எனக்குப் பாடங்களைக் கற்பதை இலகுவாக்கியது. சகலவற்றையும் நான் கற்றிருந்தேன். நான் எதிர்பார்த்த பகுதிகளிலிருந்து வினாக்கள் வந்தன. எனக்கு இவ்வாறே பெறுபேறு வரும் என எதிர்பார்த்தேன். எதிர்காலத்தில் ஒரு சமூகசேவையாளராக வர விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
தில்லையம்பலம் மங்கயர்க்கரசி
தோற்றம்: 28.02.1926
மறைவு: 11.02.2009

நாள்கள் நகர்ந்தாலும் நீங்காத் துயர்
தன்னில் நீந்துகின்றோம்
எம்மைப் பேணி கடமைதனை ஆற்றி மறைந்து விட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்....

ஈஸ்வர பதி,
சேர்ச் வீதி, உடுவில். (83447) குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 01 . 1939



மறைவு 19 . 02 . 2003

அமரர் கா.சந்திரராஜா (SLAS)
(முன்னாள் பிரதேச செயலர், சங்கானை, இணைப்பாளர் U.N.H.C.R)
திதி: திருதியை (13.03.2009)

ஆனதோ ஆண்டாறு அப்பாவே உமைப் பிரிந்து
அன்பாக அருகிருந்து ஆசையாய்த் தலை தடவி
என் செல்லப்பிள்ளைகளே என்றெம்மை வளர்த்தீரே!
முன் வைத்தீர் பந்தியிலே உமையுருக்கி எமை நீரே
பின் நாளில் உமைப் பேணிப் பார்த்திட நாம் காத்திருந்தோம்.
என் செய்தோம் பாவமையா எப்படி நாம் ஆறுவமோ.

பறாளாய் வீதி,
சுழிபுரம். (83429)
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### மார்க்கண்டு தங்கராஜா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது றாகமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தங்கராஜா (10.03.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.03.2009) புதன்கிழமை றாகமத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: T.குகன் (மருமகன்),
(உரிமையாளர், தர்மி வீடியோ, உடுவில்).
(83459)


கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
நெல்லியடியிலும், யாழ்நகரிலும்.....

Diploma in Computerized Accounting

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான
100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

யாழ்நகரிலும் நெல்லியடியிலும் ஆரம்பம்:

*Sat & Sunday*
14/03/2009 } 11.00
15/03/2009 } AM

*Wed & Friday*
18/03/2009 } 02.00
20/03/2009 } PM

Tally Accounting
புதிய பிரிவுகள்
ஆரம்பமாகிறது.

COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road
Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் தெல்லிப்பழைப் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.முரளிதரன் தலைமையில் நடைபெறும். (204-300)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆங்கில அகராதிகள்

வடமராட்சி, மார்ச் 13

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கு ஆங்கில அகராதிகள் வழங்கப்பட்டன.

இந்த அகராதிகள் மாணவர்களின் உயர் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டே வழங்கப்பட்டன. (204-236)

## தெல்லிப்பழைப் பிரதேச உணவகங்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 13

தெல்லிப்பழைப் பிரதேச செயலகப் பிரிவில் உணவு உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் சுகாதார வைத்திய அதிகாரியூடாகப் பிரதேச செயலரிடம் அனுமதி பெறவேண்டும்.

தெல்லிப்பழைச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக சிரேஷ்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.இராசதுரை இவ் அறிவித்தலை விடுத்துள்ளார்.

இந்த நடைமுறையினைப் பின்பற்றாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (50-9-300)

## திருகோணமலை - மூதூர் கப்பல் சேவை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 13

சுமார் 20 வருடங்களின் பின் திருகோணமலை - மூதூர் இடையிலான கப்பல் போக்குவரத்து கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்கின் உதயம் திட்டத்தின் கீழ் இப்பாதை இணைக்கப்பட்டதாக திருகோணமலை வதிவிட அதிகாரசபையின் முகாமையாளர் நிமல் ஜயசிங்க தெரிவித்தார்.

இதுவரை போக்குவரத்துக்கு சிறிய படகு ஒன்றே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மேலதிக பயன்களைப் பெறமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-7)

## விசாரணை சி.ஐ.டியிடம்!

மாத்தறை, அக்குரஸ்ஸ, கொடப்பிட்டியப் பகுதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலரின் உத்தரவுக்கு அமையவே இந்த விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் தலைமையில் நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் நேற்றுமுன்தினம் அரச இரசாயணப் பகுப்பாய்வாளர்கள் சோதனையை நடத்தியுள்ளனர்.

அந்த இடத்தில் இருந்து தற்கொலை அங்கியின் பகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
செல்வநாயகம் மங்கலேஸ்வரராணி
(முன்னாள் ஆசிரியை, சமாதான நீதிவான்)


தோற்றம்: 05.08.1967
மறைவு: 09.03.2004
திதி: 13.03.2009

மங்களமே நீ மறைந்து
ஐந்தாண்டுகள் சென்றாலும்
உன்னையே தினம் நினைந்து
உள்ளத்தால் போற்றுகின்றோம்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (83444)
தங்கள் பிரிவால் துயருறும்:
கணவரும், உறவினரும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 20 . 05 . 1931



மறைவு 11 . 02 . 2009

அமரர் வைரவநாதன் இராசரத்தினம்

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே- உன்
கள்ளமில்லா வெள்ளை உருவம் தான்
மறக்க முடியுமா? உங்கள் இனிய குரல்
என்றும் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

கடந்த (11.02.2009) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.03.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு. (83427) குடும்பத்தினர்.

## ஈராண்டு நினைவலைகள்

அன்னை மடிமீது 01 . 05 . 1927



ஆண்டவன் அடிமீது 06 . 03 . 2007

அமரர் சின்னத்துரை தர்மலிங்கம்
(மண்கும்பான்)
திதி: திருதியை

அன்புள்ள அப்பாவே......!
குடும்பத்தின் குல விளக்காய்
நீறணிந்த திருமேனியாய்
இன் சொல்லின் இலக்கணமாய்
அமைதியின் உறைவிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் ஈரநெஞ்சாய்
புன் சிரிப்பின் புகலிடமாய்
அன்புடனே வழிகாட்டிய தந்தையே!
ஆண்டு இரண்டாகியது
ஆறவில்லை எம் துயரம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்கும்பான்,
வேலணை. (83427)
தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2½ மாதங்களில் யாழ்.மாவட்ட மாணவருக்கு 4ஆயிரம் தபால் அடையாள அட்டைகள்

## அடுத்தவாரம் வடமராட்சியில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்13

யாழ்.பிரதம தபாலகம் இந்த ஆண்டின் கடந்த இரண்டரை மாத காலப்பகுதியில் சுமார் 4ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால் அடையாள அட்டைகளைப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்தத் தகவலைத் தபாலகத்தின் உயர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

குறிப்பாக வலிகாமம் பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் தபால் அடையாள அட்டைகள் வழங்கும் பணி ஓரளவு பூர்த்தியடைந்துள்ளது.

இச்சேவை மூலம் 4ஆயிரத்திற்கும் மேற்பட்ட தபால் அடையாள அட்டைகள் துரிதகதியில் வழங்கி முடிக்கப்பட்டன.

அடுத்த வாரத்தில் வடமராட்சிப் பகுதியில் இந்த அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையை ஆரம்பிக்கவுள்ளோம்.

பாடசாலை மாணவர்களின் வசதி கருதி யாழ்.பிரதம தபாலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடமாடும் சேவை பெரிதும் வெற்றியளித்துள்ளது.

இந்தச் சேவையில் ஈடுபடும் அஞ்சல் பணியாளர்கள் எதுவிதக் கொடுப்பனவுகளும் இன்றி மாணவர்களின் நலன் கருதிப் பணியாற்றி வருகின்றனர் - என்றார் அவர். (50-224)

# சிந்மய பாரதி வித்தியாலயத்தில் பாராட்டு விழா இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்13

கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட கணனி மென்பொருள் ஆக்கப் போட்டியில் மாகாண மட்டத்தில் விருதுகளைப் பெற்ற சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவிகளுக்கான பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த.தர்மசோதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவிகளான யோ.கௌதமி மற்றும் 7ஆம், 8ஆம் இடங்களைப் பெற்ற ம. சௌமியா, அ.குயிலினி ஆகியோரே பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (50-9)

# சங்கானைப் பகுதி வீடொன்றில் திருடர்கள் நள்ளிரவில் கைவரிசை

சங்கானை,மார்ச்13

நள்ளிரவுவேளை வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்தபோது யன்னல் கம்பியை வளைத்து வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் பெறுமதியான பொருள்களையும் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

சங்கானை - அராலி வீதியில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்தவேளை வீட்டின் பின்புறத்தில் உள்ள யன்னல் கம்பியை வளைத்து முறித்து விட்டு உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த தங்கநகைகள், வீடியோ கமரா, கைத்தொலைபேசிகள் மற்றும் பல பெறுமதியான பொருள்களையும் 15ஆயிரம் ரூபா பணத்தினையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மூவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (50-9-29)

# 'நியாப்' வீடமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத்தில் இவ்வாண்டு 3400 வீடுகள்

## பயனாளிகள் தெரிவில் மக்களின் அபிப்பிராயம் பெறப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச்13

'நியாப்' வீடமைப்புத் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டு மூவாயிரத்து 400 வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன் முதற்கட்டமாக 'நியாப்' திட்ட முகாமைத்துவப் பிரிவினால் அனுமதிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல் பொது மக்களின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கான திட்டத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இது குறித்த தமது கருத்துகளையும் அபிப்பிராயங்களையும் திட்ட முகாமைத்துவப் பிரிவுக்குத் தெரியப்படுத்தலாம் எனவும் அவ்வாறான கருத்துகள் கவனத்தில் கொள்ளப்பட்டு இறுதிப்பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் எனவும் 'நியாப்' திட்ட முகாமைத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (50-111)

# அராலிப் பகுதியில் 25 குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்13

அராலிப் பகுதியில் தற்போது 25 குடும்பங்களுக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அராலி தெற்குப் பகுதியில் உள்ள குழாய்க்கிணறு ஒன்றின் ஊடாக இந்தக் குடிதண்ணீர் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் குழாய் மூலமான குடிதண்ணீர் வசதியைப் பெறஇப்பகுதியைச் சேர்ந்தமேலும் பல குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன.

எனினும் இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்குக் குழாய்கள் மற்றும் மீற்றர் கருவி என்பவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். (50-224)



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நுகர்வோரின் அத்தியாவசிய தேவை கருதி பாரவூர்தி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

இந்தப் புதிய பாரவூர்தியின் வெள்ளோட்ட விழாவின்போது சங்கத் தலைவர் ப. கிரிதரன், சாரதி கி.சிறியிடம் பாரவூர்தித் திறப்பைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: குமார்)

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் வலைப்பந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,மார்ச்13

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15, 17, 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இந்தப் போட்டிகள் மழை காரணமாக நடைபெறவில்லை.

ஏற்கனவே வழங்கப்பட்ட அணி ஒழுங்குக்கு ஏற்ப போட்டிகள் நடைபெறும் என வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராசா அறிவித்துள்ளார். (50-86)




# ஆதரவற்றவர்களுக்கு மாதாந்த உதவித்தொகை

கோப்பாய்,மார்ச்13

தியாகி அறக்கொடை நிதியத்தின் ஏற்பாட்டில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் ஆதரவற்றவர்களுக்கு கடந்த வருட நடுப்பகுதி தொடக்கம் மாதாந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கொடுப்பனவு ஆண் முதியோர்கள் 10 பேர், தலைமை தாங்கும் குடும்பப் பெண்கள் 14 பேர், புற்றுநோயாளர் 14 பேர், கல்வி உதவி தேவைப்படும் வறிய மாணவர்கள் 8 பேர் ஆகியோருக்கு மாதாந்தம் 400 ரூபா வீதம் வழங்கப்படுகின்றன. (204-72)

# அறுவடை செய்த நெல் வெள்ளத்தில் மூழ்கியது

சுழிபுரம்,மார்ச்13

சுழிபுரம் பகுதியிலுள்ள நெல் வயல்களில் அறுவடை செய்யப்பட்ட நெல் திங்கள் பெய்த கடும் மழையால் வெள்ளத்தில் மூழ்கி நனைந்துள்ளது.

நீண்டநாள்களுக்குப் பின்னர் கடந்த திங்கட்கிழமை பெரும் மழை பெய்துள்ளது. இதனால் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கின.

அத்துடன் வயல்வேலை செய்யும் கூலி ஆள்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளமையும் அதிக சம்பளத்தைக் கூலியாள்கள் எதிர்பார்ப்பதும் நெற்செய்கையாளர்களுக்குப் பெரும் சிரமமாக அமைந்துள்ளது. (50-28)

# முதியோரைக் கௌரவமான முறையில் பராமரிக்க மூத்த பிரஜைகள் பணிமனையின் உதயம் உதவும்

## திறப்பு விழாவில் ஆறு.திருமுருகன் உரை



யாழ்ப்பாணம், மார்ச்13

சமூகத்தின் வேர்களான முதியோர்களை கௌரவமான முறையில் பராமரிப்பதற்கு மூத்த பிரஜைகள் பணிமனை உதயமாவது வரவேற்கத் தக்கதொன்றாகும்.

இவ்வாறு தெரிவித்தார் சுன்னாகம் ஸ்கந்தவேராதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.

கொக்குவிலில் அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பணிமனை திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

எமது சமூகத்தின் மூத்த வேர்களான பெரியோர்களைப் பேணிப் பாதுகாப்பதற்கென இந்தப் பணிமனை திறந்து வைக்கப்படுவதையிட்டு நான் உளமார மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று எங்கள் சமூகத்திலே நாகரிக வளர்ச்சியினால் நாம் எமது சம்பிரதாயங்களை மறந்து, மறைத்து விடுகிறோம்.

வளர்ந்து வருகின்ற உலகத்திலே நாம் எம்மை வளர்த்துக்கொள்வதற்கான சில தகவல் தொழில்நுட்பங்களைக் கைப்பற்றிக் கொள்ள[illegible] தம். அதற்[illegible]களையும் எங்களுக்குள் உள்வாங்கிவிடக் கூடாது.

குறிப்பாக எங்களுடைய இளம் சந்ததியினர் இன்று திசைமாறி எமது பாரம்பரியங்களை மறந்து தடம்புரண்டு செல்கின்றனர்.

இந்த அமைப்பினை ஆரம்பிக்கின்ற போது நிதி உதவி இல்லை. உதவி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

சமூகத்தை வழிப்படுத்தும் எந்த அமைப் பினையும் நாம் ஆரம்பிக்கின்ற போது எடுத்த காரியத்தை பின்னடிக்காமல் வெற்றிகரமாக முன்னகர்த்தவேண்டும். நிதி உதவிகள் தாமாகவே கிடைக்கும் - என்றார். (04-9)

# பழுதடைந்த உருளைக்கிழங்குக்கான நஷ்ட ஈட்டை யாழ்.செயலகம் வழங்குகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்13

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அண்மையில் விநியோகிக்கப்பட்ட உருளைக்கிழங்குகள் பெருந்தொகையானவை பழுதடைந்தமையால் அவை பாவனைக்குதவாத நிலையில் கொட்டப்பட்டன. அதற்கான நஷ்டஈடு யாழ்.செயலகத்தால் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றது.

கப்பல் மூலம் தருவிக்கப்பட்டுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நுகர்வோருக்கு இந்த உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்பட்டது.

இதில் பெருந்தொகையான உருளைக் கிழங்குகள் அழுகிச் சேதமடைந்ததால் சங்கங்கள் நஷ்டம் அடைந்தன.

பழுதடைந்த கிழங்குகளின் விவரங்களைச் சங்கங்கள் செயலகத்திற்குச் சமர்ப்பித்து நிவாரணம் வழங்குமாறு கோரியிருந்தன.

இதனையடுத்துப் பழுதடைந்த உருளைக் கிழங்குக்கான நிவாரணத்தை யாழ். செயலகம் வழங்கி வருகிறது. (50-224)

# நீர் விநியோகம் சீரானது

யாழ்ப்பாணம்,மார்ச்13

திருநெல்வேலியில் 'பம்' நிலையத்திலிருந்து குருநகர் தாங்கிக்கு வழங்கப்படுகின்ற நீர் விநியோகம் சீராக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி'பம்' நிலையத்திலிருந்து குருநகர் தாங்கிக்கு நீரேற்றும் குழாய் பலாலி வீதி ஆலடிச் சந்தியில் உடைந்து, நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

கடந்த 11ஆம் திகதி மேற்கொண்ட திருத்த வேலைகள் காரணமாக நீர்விநியோகம் சீராக்கப்பட்டுள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (50-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு வருடாந்த மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி சாந்தினி சுந்தரேஸ்வரன் ஆகியோர் மாணவருக்கு வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும், கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். ஓய்வுபெற்ற திட்டப்பணிப்பாளர் ரி.தேவராஜாவும் படத்தில் காணப்படுகின்றார்.
(படங்கள்: எஸ்.கதிரவேலு)

## சமநிலை ஆளுமையாளர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டியது பெற்றோரின் கடமை

### வங்கி முகாமையாளர் சுந்தரேஸ்வரன் உரை

மாணவர்களின் கல்வியிலே மட்டும் கவனம் செலுத்துவதை விட்டு அவர்களைப் பல்துறை ஆற்றலுள்ளவர்களாக உருவாக்க ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். அவர்களைக் கெட்டிக்காரர்களாக மட்டும் வளர்த்தெடுக்காமல் நல்ல மனிதர்களாகவும் வளர்க்க வேண்டும். இவ்வாறு ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் குறிப்பிட்டார். அண்மையில் நடைபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவினருக்கான இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய சி.சுந்தரேஸ்வரன் பெற்றோர் பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே வைத்தியராக வரவேண்டும், பொறியியலாளராக வரவேண்டும் என்று ஆசையை ஏற்படுத்தி வளர்க்கின்றனர். இந்த ஆசையின் காரணமாகப் பிள்ளைகள் இழந்து போனவை ஏராளம். நல்ல கலைகளை, விளையாட்டுத்துறை ஈடுபாட்டை எல்லாம் இழந்தே அவர்கள் கல்வி கற்கின்றனர்.

வேலைவாய்ப்புக்களுக்கான நேர்முகப் பரீட்சைகளில் அறிவைச் சோதித்த காலம் மாறி இப்போது பண்பைச் சோதிக்கும் காலம் வந்து விட்டது. இன்று நேர்முகப் பரீட்சைக்கு வருபவர் எவ்வாறு நடந்து கொள்கின்றார்? எவ்வாறு கதைக்கிறார் என்பவற்றையே முக்கியமாகக் கவனிக்கின்றனர். இங்கு அறிவை விட நற்பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. எனவே படிப்பு, படிப்பு என்று மட்டும் அலைவதை விட்டு மாணவர்கள் சமநிலையான ஆளுமை உடையவர்களாக வளரவேண்டும் என்று அவர் கூறினார்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற திட்டப்பணிப்பாளரும் ஸ்கந்தா பழைய மாணவர் சங்கச் செயலாளருமான திரு. ரி.தேவராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருமதி சாந்தினி சுந்தரேஸ்வரன் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (04-55)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்புத் தொடர்பாக நகர அபிவிருத்தி ஆலோசனைக் குழு மற்றும் சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளதாக நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (50-207)

## பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் சரணடைவதன் மூலம் புனர்வாழ்வு முகாம்களின் ஊடாக எதிர்காலத்தை வளமாக்கலாம்

### யாழ்.படைத் தலைமையகம் அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 3

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரை அவற்றைக் கைவிட்டுச் சரணடையுமாறும், அவ்வாறு சரணடைவோருக்கு புனர்வாழ்வு வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்து பலாலி படைத் தலைமையகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் சுதந்திரமாக தமது தொழில்களில் ஈடுபட்டு வாழ்ந்து வந்த மக்களுக்கு அவர்களின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் இல்லாதொழித்து தமிழ் மக்களின் ஒரே மீட்பாளர்கள் என்று தம்மை இனங்காட்டிக்கொண்டு மிலேச்சப் புலிப் பயங்கரவாதிகள் படிப்படியாக தமது அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் விஸ்தரித்து வந்தனர். புலிப்பயங்கரவாதிகள் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் மீது பலவந்தமாகவே சுமத்தி வந்ததுடன் அவற்றை செயற்படுத்தாதவர்களுக்கு கடும் தண்டனைகளை விதித்து வந்தனர். இதன் காரணமாக இப்பகுதி மக்களுக்கு கடும் கெடுபிடிகளுக்கு மத்தியில் கொந்தளிப்பான சூழ்நிலையில் வாழ வேண்டி ஏற்பட்டதுடன் இது இப்பகுதியில் வாழ்ந்த குடும்பங்களின் பிள்ளைகளுக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தியது.

பயங்கரவாதத்தின் உண்மைத் தன்மையையும் உண்மை நிலைமைகளையும் உணர்ந்து கொண்ட இயக்க உறுப்பினர்களுக்கு அதிலிருந்தும் விடுபட வேண்டிய தேவை இருப்பினும், விடுபடுவதற்கான நம்பிக்கையான வழி தெரியாதிருந்தது. காலப்போக்கில் அவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பினர் மீதும் அரசாங்கத்தின் மீதும் ஓரளவு நம்பிக்கை ஏற்படுவதற்கான வழி பிறந்தாலும், இயக்கத்தில் இருந்தும் தப்பி வருவதற்கு அவர்கள் நினைத்தது போல் அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. பாதுகாப்புப் படையினரும் அரசாங்கமும் இதனை உணர்ந்த பின்னர் அதற்கான சிறந்த முறையான வழியொன்றை வகுத்தனர்.

அதன்படி புலிகள் இயக்கத்தை விட்டு விலகி அல்லது தப்பி வரும் இயக்க உறுப்பினர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பாதுகாப்புடன் கூடிய புனர்வாழ்வு முகாம்கள் நிறுவப்பட்டன. அவ்வாறு நிறுவப்பட்ட புனர்வாழ்வு முகாம்களும் ஒன்று யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போதைக்கும் அம்முகாம் மிக சிறப்பாக இயங்கி வருகிறது. கடந்த காலங்களில் இயக்கத்தின் மீது வெறுப்படைந்து அதனை விட்டும் தப்பிவரும் இயக்க உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதுடன் இவ்வாறு யாழ்.குடாநாட்டிற்குத் தப்பி வந்து சரணடையும் இயக்க உறுப்பினர்களுக்கு இம்முகாமில் வெற்றிகரமாக புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது. இவர்களுள் இயக்கத்தின் மீது வெறுப்படைந்த நேரடி உறுப்பினர்களும் இயக்கத்திற்கு பல்வேறு முறைகளில் உதவி ஒத்துழைப்புகளை வழங்கியவர்களும் அடங்குவார்கள்.

முதலில் இவ்வாறு தப்பி வரும் இயக்க உறுப்பினர்கள், இயக்கத்தினால் விடுக்கப்படும் மரண அச்சுறுத்தலில் இருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக ஐ.நா.அமைப்பினுடன் தொடர்புடைய செஞ்சிலுவைச் சங்கம் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்புகள் ஊடாக பாதுகாப்புப் படையினர் அல்லது பொலிசாரிடம் சரணடைவதுடன் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நீதிமன்ற ஆலோசனைப்படி புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்படுகின்றனர்.

ஆகவே நீதிமன்றத்தின் ஊடாக சரணடையும் இவர்களின் பாதுகாப்பு சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தப்படுவதுடன், எவ்வித அச்சுறுத்தலுக்கோ, பலவந்தப்படுத்தலுக்கோ, தாக்குதலுக்கோ துன்புறுத்தலுக்கோ உட்படுவதில்லை. அத்துடன் இவர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அவர்களின் ஒழுக்கம் மற்றும் அவர்கள் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனரா என்பது பற்றிய விசாரணைகள் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்படும்.

இந்த புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெறும் முதியோர், இளைஞர்கள், சிறார்கள் என அனைவருக்குமே மனித நேயத்துடன் உபசரிக்கப்படுவதுடன், அவர்களின் உணவு, ஆடைகள், இருப்பிடம், மருத்துவ வசதி, நீர், மலசலகூட வசதி என அனைத்து அடிப்படை வசதிகளும் உச்ச நிலையில் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் அவர்களின் நலன்புரி நடவடிக்கைகளும் உயர்தரத்தில் அமைந்துள்ளன. தமது மத வழிபாடுகளுக்காக வழிபாட்டு இடங்களும், விளையாட்டுத் தகைமையை மேம்படுத்திக்கொள்ள விளையாட்டுக்களில் ஈடுபடவும், பொழுது போக்கிற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர இவ்வாறு சரணடையும் இளைஞர், யுவதிகளினதும் சிறார்களினதும் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் பொருட்டு மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தொழிநுட்பப் பயிற்சியும், கல்வியும் இவற்றில் பிரதான இடம் வகிக்கின்றன. இதன்படி யாழ்.தொழிநுட்பக் கல்லூரியின் ஒத்துழைப்புடன் விஷேட பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தச்சுத் தொழில், மரவேலை, வீட்டு மின்னிணைப்பு மற்றும் மின்னியல், கணனி, முடி திருத்துதல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் உட்பட மேலும் பல பயிற்சிப் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தாம் விரும்பிய ஒரு பயிற்சியையோ அல்லது பல பயிற்சிகளையோ பெற்று தொழிற்துறையில் தாம் விரும்பியவாறு ஈடுபடுவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட் டுள்ளன. இப்பயிற்சிகளை திறமையாக நிறைவு செய்த சுமார் 17 பேர் வெளி நாட்டு வேலைவாய்ப்புக்களை பெற்றுச் சென்று தமது எதிர்கால வாழ்வை ஒளிமய மானதாக்கிக் கொண்டுள்ளனர். அத்துடன் மேலும் பலர் பயிற்சிகளை நிறைவு செய் துள்ளதுடன் அவர்களுக்கும் மிக விரை வில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் கிடைக்கவிருக்கின்றன. கல்வி கற்கும் வயதுடையவர்களுக்கு அவர்க ளின் வயதின் அடிப்படையில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டுள்ளது. இவை யாவும் யுனிசெப், மனித உரிமைகள் அமைப்பு உட்பட ஐ.நா. அமைப்புடன் தொடர்புடைய மேலும் பல அமைப்புகளின் மேற்பார்வையில் மேற் கொள்ளப்படுகின்றன. இங்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் புனர்வாழ்வுப் பணிப்பாளர் அலுவலகத்தின் நிதியுதவி மற்றும் ஆலோ சனைகளும் எப்போதும் கிடைத் து வருவது டன் அவர்களின் கண்காணிப்புகளும் இடம் பெறுகின்றன.

இன்று எல்ரீரீஈ யினரின் ஈழம் கனவாக ஆகியுள்ளதுடன், பயங்கரவாதிகளின் உண்மைத் தோற்றம் முழு உலகிற்கும் வெளிப்படையாகியுள்ளது. இதன் மூலம் புலிகளுக்கு தொடர்ந்தும் செயற்படுவதற்குரிய சூழல் அற்றுப் போவதுடன் சர்வதேச நாடுகளிலிருந்தும் உதவிகள் கிடைப்பது அசாத்தியமாகியுள்ளது. மீண்டும் புலிகளுக்கு ஈழம் பற்றிய கனவையேனும் காணவேனும் முடியாமல் போகும்.

இன்னும் குறுகிய காலத்தில் எல்ரீரீஈ தலைவர்களுக்கு சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொள்ள வேண்டி ஏற்படுவதுடன், பலவந்தமாகக் கடத்திச் சென்று யுத்தத்தில் ஈடுபட்டுள்ள உங்களுக்கும் அவ்வாறு தற்கொலை செய்து கொள்வதற்கோ அல்லது தற்கொலைத் தாக்குதலை மேற்கொள்ளுமாறோ ஆலோசனை வழங்குவார்கள். என்றாலும் உங்களுக்கு வாழ்வதற்கான மற்றுமொரு சந்தர்ப்பம் மீதமுள்ளது. பலவந்தமாக யுத்தத்திற்குள் உள்வாங்கப்பட்டிருக்கும் இளைஞர், யுவதிகளான நீங்களும் சின்னஞ் சிறார்களும் தொடர்ந்தும் வாழ வேண்டும். நாட்டை பொறுப்பேற்கவுள்ள நீங்கள் அவ்வாறு அழிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர், அத்துடன் உங்கள் பெற்றோர், உற்றார், உறவினர்கள், சகோதர சகோதரிகள் நீங்கள் வரும்வரை வழிபார்த்து காத்திருக்கின்றனர். மீண்டும் அவர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்து உங்கள் எதிர்காலத்தை வெற்றிகரமாக மாற்றிக் கொள்ள உங்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது. அதற்காக செய்ய வேண்டியது இதுவொன்றே உங்கள் கைகளில் பலவந்தமாக திணிக்கப்பட்டிருக்கும் ஆயுதத்தை கைவிடுங்கள், வந்து சரணடையுங்கள் ஆயுதங்களுடனோ இல்லாமலோ வந்து உங்களுக்கு சரணடைய முடியும். அதற்கான சந்தர்ப்பம் மீதமுள்ளது. உங்கள் எதிர் காலத்தை வளப்படுத்தி சிறந்த வாழ்க்கையை மேற்கொள்ளத் தேவையான அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், உங்கள் பாதுகாப்பையும் நாம் பொறுப்பேற்கின்றோம்.

## ஜேர்மனியில் பாடசாலை ஒன்றில் மாணவர்கள் உட்பட 15 பேர் சுட்டுக்கொலை

ஜேர்மனியில் ஸ்ரக்கர்ட் நகருக்கு வடக்கே உள்ள இரண்டாம் நிலைப் பாடசாலை ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் 12 மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 15 பேர் பலியாகினர்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் இப்பாடசாலையின் 17 வயதுடைய பழைய மாணவராவார். இவர் பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதும் அந்த நபரை பொலிஸார் சுட்டுக் கொன்றனரா அல்லது அவர் தன்னைத் தானே சுட்டுக்கொண்டாரா என்பது குறித்துத் தெரியவில்லை. (50-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கேட்டுப் போராடிய பாக். எதிரணியினர் கைது!

இஸ்லாமாபாத், மார்ச் 13

பாகிஸ்தானில் அரசின் தடை உத்தரவையும் மீறி திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்பட்ட வழக்கறிஞர்களின் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி, பொலிஸாரால் தடியடி நடத்தி கலைக்கப்பட்டது. பேரணியினர் நாலா புறங்களிலும் சிதறி ஓடினார்கள் என ஊடகங்கள் தெரிவித்தன.



பாகிஸ்தானின் துறைமுகநகரான கராச்சியிலுள்ள உயர்நீதிமன்ற வளவிலிருந்து நேற்று வியாழக்கிழமை அரசுக்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகியது. அச்சமயம் நீண்ட தடிகளுடன் வந்து குவிந்த பொலிஸாரால் பேரணியினர் நையப்புடைக்கப்பட்டனர் என்றும் இந்த ஊடகங்கள் குறிப்பிட்டன.

நான்கு நாள்கள் நீண்ட நெடும்பயணத்தை மேற்கொண்டு, எதிர்வரும் திங்கட்கிழமை தலைநகரான இஸ்லாமாபாத்தை அடைந்து, அங்கு நாடாளுமன்றத்துக்கு முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபட பேரணி அமைப்பாளர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

கூட்டங்கூடுவதற்கு அரசால் விதிக்கப்பட்ட தடை உத்தரவையும் மீறி, வழக்கறிஞர்கள் நேற்று வியாழக்கிழமை, கராச்சி சிந் உயர்நீதிமன்ற வளவில் வந்து திரண்டார்கள். ஜமாத்-இ- இஸ்லாமி கட்சித் தொண்டர்களும் பேரணியில் கலந்துகொள்வதற்காக திரண்டு வந்தார்கள் என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

அங்கிருந்து ஆரம்பமான பேரணியினரைத் தடுக்க முயன்ற பொலிஸாருடன் பேரணியினர் மோதலில் ஈடுபட்டனர். இதனையடுத்து, பொலிஸார் தடியடி நடத்தி பேரணியைக் கலைத்தனர். வன்முறையில் ஈடுப்பட்டடசின் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். பேரணி கலைக்கப்பட்டதும், நூற்றுக்கணக்கான பொலிஸாரும், இராணுவத்தினரும் உயர்நீதிமன்ற வளவில், பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர் என பி.பி.ஸி. நிருபர் இலியாஸ்கான் குறிப்பிட்டார்.

நவாஸ் ஷெரீப்பும் அவரது சகோதரர் ஷாபாஸ்ம் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர் என தகவல்கள் வெளியாகின. அதை பாகிஸ்தான் அரசு மறுத்தது. பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணங்களிலும், தலைநகர் இஸ்லாமாபாத்திலும் நவாஸ் ஷெரீப் கட்சியைச் சேர்ந்த ஏராளமான பிரமுகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்சியின் தலைவர் ராஜா ஜப்ருல் உட்பட பலர் வீட்டுக்காலில் வைக்கப்பட்டுள்ளனர். பஞ்சாப், சிந்து மாகாணங்களில் 15 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நீதி கேட்டு நெடும் பயணம் மேற்கொள்ள உத்தேசித்திருக்கும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், சட்டத்தரணிகளும், தொண்டர்களும் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்படுகின்றனர். பஞ்சாப், சிந்து மாகாணங்களில் ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவற்றுக்கு அரசு தடை விதித் துள்ளது.

இந்த நிலையில்தான் வழக்கறிஞர்களும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற முற்றுகைக் கிளர்ச்சியை அறிவித்துள்ளனர். இதனால் சட்டம்- ஒழுங்கு பாதிக்கப்படும் என்ற காரணத்தைக் காட்டியும், நாட்டு மக்களிடையே வலுத்துவரும் பிரிவினை வாதத்தைத் தடுத்து, நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற தாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவது அவசியமாகிறது எனக் கூறியும் ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என இராணுவத் தலைமை கருதுகிறது.

இஸ்லாமாபாத்திலும், பஞ்சாப் மாநிலத்திலும் கிளர்ச்சிக்காரர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நூற்றுக்கணக்கானவர்களைப் பொலிஸார் கைது செய்து வருகின்றனர். வழக்கறிஞர்களின் வீடுகளிலும், அலுவலகத்திலும் திடீர் சோதனைகளை நடத்தி வருகின்றனர். பொது இடங்களில் நாலு பேருக்கு மேல் கூடக்கூடாது. ஊர்வலமாகப் போகக்கூடாது. அனுமதியின்றி பொதுக்கூட்டங்களை நடத்தக்கூடாது என்றும் பொலிஸார் 144 தடை உத்தரவுகளை போட்டுள்ளனர்.

# இந்தோனேஷியாவில் இருமுறை நில நடுக்கம்

ஜகார்த்தா, மார்ச் 13

இந்தோனேஷியாவில் புதன்கிழமை காலை அடுத்தடுத்து இரு தடவை மிதமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

பபுவா மாகாணத்தின் கடலோரப் பகுதியில் இந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. முதல் நிலநடுக்க வீச்சு ரிச்டர் அளவுகோலில் 5.5 அலகாகப் பதிவானது.

முதல் நிலநடுக்கம் உருவான அடுத்த 10 நிமிடங்களில் இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் வீச்சு ரிச்டர் அளவுகோலில் 5.0 அலகாகப் பதிவானது என அமெரிக்க நில நடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கங்களால் ஏற்பட்ட உயிரிழப்பு, பொருள்சேதம் ஆகியவை குறித்து உடனடித் தகவல் ஏதும் இல்லை.

உலக அரங்கில்

# அமெரிக்காவில் 10 பேரை சுட்டுக் கொன்றவர் பெயர் விவரப் பட்டியல் வைத்திருந்தாராம்

வாஷிங்ரன், மார்ச் 13

அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் புதன்கிழமை 10 பேரைச் சுட்டுக் கொன்ற துப்பாக்கிதாரி, தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்னர் சுட்டுக் கொல்லப்படவேண்டியவர்களின் பெயர்களடங்கிய விவரப்பட்டியலொன்றையும் தயாரித்து வைத்திருந்துள்ளார்.

''துப்பாக்கிதாரியின் இல்லத்தை விசாரணையாளர்கள் சோதனையிட்டார்கள். அப்போது அவரால் எழுதப்பட்ட விவரப் பட்டியல் சிக்கியது. கொல்லப்படவேண்டிய எதிரிகள் என அதற்குத் தலைப்பிடப்பட்டிருந்தது. அதன் கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன'' என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''மைக்கேல் மெக்லெண்டன் என்னும் 28 வயதான இந்நபர் தனது வீட்டுக்குத் தீ மூட்டியுள்ளார். பின்னர் புளோரிடா மாநில எல்லைக்கருகிலுள்ள சேம்ஸன், ஜெனிவா ஆகிய இரு நகரங்களிலும் வீடுகள், கடைகள், வாகனங்கள் ஆகியவற்றின் மீது கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்'' என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

''துப்பாக்கிதாரியான மெக்லெண்டனின் வீடு முற்றாக தீக்கிரையாகவில்லை. இங்கிருந்து மீட்கப்பட்ட பட்டியலில், துப்பாக்கிதாரியின் குடும்பத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள், அவரது பாரியார், புதல்வி ஆகியோரின் பெயர்களும் அடங்கியிருந்தன'' என உள்ளூர் பொலிஸ் அதிகாரியொருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''துப்பாக்கிதாரியின் கைப்பட எழுதப்பட்ட விவரப் பட்டியல் கிட்டியுள்ளது. அதில் இவர் தன்னோடு தொழில் புரிந்தவர்களின் பெயர்களையும், தனக்கு தீங்கு இழைத்தவர்களின் பெயர்களையும், இழைக்கப்பட்ட கொடுமைகளையும் குறிப்பிட்டிருந்தார்'' என மாவட்ட சட்டமா அதிபர் கெரி மெக் எமிலி குறிப்பிட்டார்.

''இந்த இல்லத்துக்கு வருகை புரிந்திருந்த பிரதித் தலைவர் மயர்ஸின் பிறிதொரு புதல்வி, பலத்த காயங்களுடன் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், உயிராபத்தில்லை'' என மேலும் அவர்கள் தெரிவித்தார்கள்.

''இச்சம்பவத்தைக் கேள்வியுற்று நான் கதறி அழுதேன். கண்ணீரும் வற்றிவிட்டது. எனது மனைவியும், புதல்வியும் கொல்லப்பட்ட அவ்வீட்டுக்குள் என்னால் போக முடியுமா என கலங்குகிறேன். எனது மற்றுமொரு பெண் குழந்தை அழுது புலம்பும் என்னைப் பார்த்து தன்னை 'தூக்குமாறு கெஞ்சுகிறது. இதுதான் எனது நிலை'' என பிரதித் தலைவர் ஜோஸ் மயர்ஸ் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''இப்படுகொலைகளை அடுத்து, அயலிலுள்ள பிறிதொரு வீட்டுக்குள் நுழைந்த மைக்கல் மெக்லெண்டன், அங்கு 74 வயதான தனது பாட்டியைச் சுட்டுக்கொன்றார் என்றும் அதிகாரிகள் கூறினார்கள். இவர் தனது முழுக் குடும்பத்தையும் அழித்துள்ளார்'' என சடுதி மரண விசாரணை அதிகாரி ரொபர்ட் பிரிச்சர்ஸ் தெரிவித்தார்.

''இதையடுத்து, தனது காரில் விரைந்த இந்நபர் சம்ஸனில் இரு பாதசாரிகளையும், ட்ரக்கொன்றை செலுத்திக்கொண்டிருந்த சாரதியையும் சுட்டுக்கொன்றார். பின்னர் நகருக்குள் ஊடுருவி தன்னியக்கத் துப்பாக்கியால் கண்டபடி சுட்டுக்கொண்டு சென்றார்'' என்றும் அதிகாரிகள் கூறினார்கள். இறுதியில் இந்நபர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

# அமெ. இரட்டைக் கோபுர தாக்குதல் சூத்திரதாரிகள் ஒப்புதல் வாக்குமூலம்

நியூயோர்க், மார்ச் 13

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் மீது விமானங்களை மோதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை திட்டமிட்டு நிறைவேற்றியது தாங்களே என 5 பேர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் 3,000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலை சதித் திட்டம் தீட்டி நிறைவேற்றியவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்ட 5 பேர் குவாண் டனாமோ சிறையில் அடைத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர்.

நியூயோர்க் தாக்குதலை திட்டம் தீட்டி நிறைவேற்றியவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட காலித் ஷேக் மொஹம்மது உள்ளிட்ட 5 பேரும் தாங்கள்தான் சதித் திட்டம் தீட்டி தாக்குதலை நடத்தினார்கள் என்று ஒப்புக் கொண்டு வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

அவர்கள் அளித்த அந்த வாக்குமூலம் அமெரிக்காவின் இராணுவ ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

''2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 இல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கான ஆலோசனைக் குழுவினர் என நாங்கள் அழைக்கப்பட்டோம். நாங்கள் நடத்திய அந்தத் தாக்குதல் இறைவனுக்குச் செய்த அர்ப்பணம்'' என அவர்கள் அந்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்கள் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக் முன்னாள் துணைப் பிரதமருக்கு 15 வருடகாலச் சிறைத் தண்டனை!

ஈராக்கின் முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அஜீஸுக்கு மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த குற்றத்திற்காக 15 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

17 வருடங்களுக்கு முன்னர், 1992 இல் அரச விலைக்கட்டுப்பாடுகளை மீறிய ஈராக்கிய வர்த்தகர்கள் நால்வர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட விதம் தொடர்பாக விசாரணை நடத்திய பக்தாத் நீதிமன்றம் இவருக்கும் அதில் தொடர்பு இருந்ததாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

குற்றச்சாட்டுகளை அஜீஸ் மறுத்திருக்கிறார்.

2003 இல் ஈராக்கில் அமெரிக்கப் படையினரால் கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி சதாம் ஹுசைனின் நெருங்கிய ஆலோசகர்களில் ஒருவராக தாரிக் அஜீஸ் இருந்தவர்.

இதேவேளை, வர்த்தகர்கள் கொலைச் சம்பவத்தில் பங்குகொண்டிருந்த சதாம் ஹுசைனின் உறவினரான கெமிக்கல் அலி எனப்படும் ஹசன் அல் மஜீத்துக்கும் 15 வருட காலச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

சதாம் ஹுசைனின் வேறு உறவினர்கள் இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# புஷ்ஷுக்கு சப்பாத்து வீசியவருக்கு மூன்றாண்டு காலச் சிறைத்தண்டனை

பக்தாத், மார்ச் 13

ஈராக்கில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை நோக்கி தம் சப்பாத்துகளைக் கழற்றி எறிந்த ஊடகவியலாளர் முந்டடார் அல்-ஷெய்டிக்கு மூன்றாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சப்பாத்து வீச்சு தொடர்பான வழக்கு விசாரணை ஈராக்கின் தலைநகரான பக்தாத்திலுள்ள நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை மீள ஆரம்பமாகியது.

''நான் குற்றவாளியல்ல. ஏனைய ஈராக்கியர் காட்டும் இயற்கையான ஆத்திர வெளிப்பாட்டையே நானும் காட்டியுள்ளேன்'' என எதிரியான முந்டடார் இதில் நீதிவானை நோக்கிக் குறிப்பிட்டார்.

பக்தாத்தில் கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற உடகவியலாளர் மாநாடொன்றில் முந்டடார் தமது இரு சப்பாத்துகளையும் கழற்றி ஒன்றன்பின் ஒன்றாக புஷ்ஷை நோக்கி எறிந்தார். புஷ் இவற்றிலிருந்து தம்மை சுதாகரித்துக்கொண்டார்.

2003 ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. அது முதல் ஈராக்கில் இடம் பெற்று வரும் மோதல்கள், உயிரிழப்புகள், அவலங்கள் ஆகியவற்றால் ஈராக்கியர் கொதிப்படைந்துள்ளனர். அதன் பிரதிபலிப்பே சப்பாத்து வீச்சு என முந்டடாரின் சட்டத்தரணிகள் தெரிவித்துக்கொண்டனர்.

இவருக்கெதிரான குற்றச்சாட்டுகளை நிராகரிக்குமாறும், புஷ்ஷுக்கு இதனால் ஆபத்து ஏற்படவில்லையென்றும் மேலும் இச்சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினார்கள்.

இதையடுத்து, எதிரிக்கு மூன்று வருட காலச் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

# 55 ஆயிரம் பங்களாதேஷ் தொழிலாளர்களுக்கு மலேஷியாவில் தொழில் விசாக்கள் ரத்து

கோலாலம்பூர், மார்ச் 12

தொழிற்சங்கங்களின் கோரிக்கையை அடுத்து, மலேஷிய அரசு 55,000 பங்களாதேஷ் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட விசாக்களை இரத்துச் செய்துள்ளது. கடந்த ஆண்டு விசா வழங்கப்பட்டு, இன்னும் மலேஷியா வந்து சேராதவர்கள் இங்கு வேலை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என உள்துறை அமைச்சர் சைட் அமிட் அல்பார் குறிப்பிட்டுள்ளார்.

''நாட்டின் இப்போதைய சூழலில் இத்தடை மிக அவசியம். ஒரு சில துறைகளை தவிர்த்து ஏனைய துறைகளுக்கு அந்நிய தொழிலாளர்கள் தேவை இல்லை'' என்றும் அவர் கூறியுள்ளார் என தேசிய செய்தி நிறுவனமான பெர்னாமா அறிவித்தது.

நாடு ஆள்குறைப்பு நடவடிக்கைகளையும் பொருளாதாரத் தேக்க நிலையையும் எதிர்நோக்குகின்றது. அதனால் 70,000 பங்களா தேஷ் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட விசாக்களை அரசு இரத்துச் செய்யவேண்டும் என மலேஷிய தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியிருந்தன.

மலேஷிய தொழிலாளர்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்துள்ள நிலையில், கூடுதல் அந்நிய தொழிலாளர்கள் தேவையில்லை என மலேஷிய தொழிற்சங்கக் காங்கிரஸ் (எம்டியுசி) உதவித் தலைவர் ஏ.பாலசுப்பிரமணியம் 'நியூ ஸ்ரேய்ட்ஸ் ரைம்ஸ்' நாளேட்டிடம் கூறியிருந்தார்.

# பங்களாதேஷ் கிளர்ச்சி சம்பவத்தை விசாரிக்க ஸ்கொட்லண்ட் வருகை

பங்களாதேஷில் துணை இராணுவத்தினர் திடீரென கிளர்ச்சியில் ஈடுபட்டு 73 இராணுவ அதிகாரிகளை பிணைக்கைதிகளாக பிடித்துக் கொன்ற சம்பவம் குறித்து விசாரிக்க ஸ்கொட்லாந்து புலனாய்வுப் பொலிஸார் புதன்கிழமை பங்களாதேஷை வந்தடைந்தனர்.

4 பேர் அடங்கிய ஸ்கொட்லாந்து புலனாய்வுக் குழுவினர் துணை இராணுவ கிளர்ச்சி குறித்து பங்களாதேஷ் குற்றத்தடுப்பு துறையினரைச் சந்தித்து ஆலோசனை நடத் தவுள்ளனர்.

துணை இராணுவத்தினர் கிளர்ச்சிக்கு பாகிஸ்தான் உளவு அமைப்பு (ஐஎஸ்ஐ) பின்னணியில் இருந்தது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இதனால் இதுகுறித்து தீவிரமாக விசாரிக்க ஸ்கொட்லாந்து புலனாய்வுக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

துணை இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டு இராணுவ அதிகாரிகளைக் கொன்ற சம்பவ விசாரணைக்கு அமெரிக்காவும், ஸ்கொட்லாந்தும் உதவ வேண்டும் என பங்களாதேஷ் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளை ஏற்று, அமெரிக்கப் புலனாய்வுக் குழுவினர் இருதினங்களுக்கு முன்னர் பங்களாதேஷுக்கு வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் ஸ்கொட்லாந்து புலனாய்வுக் குழுவினரும் வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதி ஒரு தமிழினத் துரோகி என்பது அவரது அறிக்கை மூலம் நிருபணமாகியது

## குற்றஞ்சாட்டுகிறார் ஜெயலலிதா

சென்னை, மார்ச் 13

அ.தி.மு.க. சார்பில் திரட்டப்பட்ட நிதி இலங்கைத் தமிழர்களை சென்று அடையவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் முதலமைச்சர் கருணாநிதி ஈடுபட்டுள்ளார். தான் ஒரு 'தமிழினத் துரோகி' என்பதை கருணாநிதி தன்னுடைய அறிக்கையின் மூலம் நிரூபித்து விட்டார் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

இதன் மூலம் அவர் தமிழினத் துரோகி என நிரூபித்துள்ளார் என்றும், கருணாநிதியின் முயற்சியை முறியடித்து செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் நிதியை இலங்கைத் தமிழர்களுக்கு அனுப்பப் போகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையையே நகைச்சுவையாக எடுத்துக் கொண்டு, 'அனைத்துக் கட்சிக் கூட்டம்', 'நாடாளுமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா கடிதங்களைப் பெறுதல்', ''ராஜினாமா கடிதங்களை கிழித்துப் போடுதல்' 'மனிதச்சங்கிலிப் போராட்டம் என பாடசாலைக் குழந்தைகள் உட்பட அனைவரையும் மழையில் நிற்க வைத்து தந்தையும், மகனும் வாகனத்தில் பவனி வருதல்', 'பிரதமருக்கு தந்தி', 'இறுதி வேண்டுகோள் என்ற தலைப்பில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்' என பல்வேறு சிரிப்பு நாடகங்களை அரங்கேற்றி, இலங்கைத் தமிழர்களுடைய அழிவிற்கும், துன்பத்திற்கும், துயரத்திற்கும், இன்னலுக்கும் காரணமாகியுள்ள கருணாநிதி, என்னுடைய அறிக்கையை நகைச்சுவை என்று கூறியிருப்பது கேலிக்கூத்தாக இருக்கிறது.



நான் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்றவுடன், ஒரே நாளில் மருந்துகளையும், மருத்துவ உபகரணங்களையும் தயார் செய்து, விமானமும் ஏற்பாடு செய்து, அன்றைய தினமே அனுப்புவது சாத்தியமா என்று கருணாநிதி தனது அறிக்கையில் வினவியிருக்கிறார்.

நான் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் என்ற அறிவிப்பு இம்மாதம் 5 ஆம் திகதியன்றே வெளியிடப்பட்டுவிட்டது. இலங்கைக்கு மருத்துவக்குழுவை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மூன்று, நான்கு நாள்களில் மத்திய அரசு தாராளமாகச் செய்யலாம். அனைத்தையும் தெரிந்திருந்தும், ஒன்றும் தெரியாதது போல் நடிக்கும் கருணாநிதியை என்னவென்று சொல்வது?

இலங்கைத் தமிழர்களை அழிப்பதற்காக மத்திய அரசு ஆயுதங்களையும், அதிநவீன சாதனங்களையும் அளித்த போதும், இலங்கை இராணுவத்திற்கு இந்தியாவில் பயிற்சியளித்த போதும் வாய் திறக்காத கருணாநிதிக்கு இலங்கைத் தமிழர்கள் குறித்து யாரையும் விமர்சிக்க அருகதை இல்லை என்பதை முதலில் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தனிப்பட்ட ஒரு நபரோ, ஒரு நிறுவனமோ, வெளி நாட்டில் உள்ள மக்களுக்கு விநியோகம் செய்ய செஞ்சிலுவை சங்கம் மூலமாக மத்திய அரசின் அனுமதி இல்லாமல் எந்தத் தொகையையும் அனுப்ப இயலாது என்ற உண்மையைக்கூட தெரிந்துகொள்ளாமல் நான் அறிக்கை வெளியிட்டுள்ளேன் என தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

கருணாநிதியினுடைய அறிக்கையின் வரிகளைப் பார்த்தால், அ.தி.மு.க. சார்பில் திரட்டப்பட்ட நிதி இலங்கைத் தமிழர்களை சென்றடையாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. நல்லது செய்வதைக் கெடுப்பதில் கருணாநிதிக்கு நிகர் கருணாநிதி தான். கருணாநிதியின் தீய எண்ணத்தை தமிழக மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். 'வில்லன்' கருணாநிதியின் வேடம் கலைந்துவிட்டது.

தமிழ், தமிழன், தமிழ்ப் பண்பாடு என்று சொல்லி தன்னுடைய வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்ட கருணாநிதி, தன்னுடைய அறிக்கையின் மூலம் தான் ஒரு 'தமிழினத் துரோகி' என்பதை நிரூபித்து விட்டார். துரோகி தூக்கி எறியப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை - என்றுள்ளது.

# மாயாவதி பிரதமராக வந்தால் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு

## சிவகாமி தெரிவிப்பு

தேசிய அளவில் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவி மாயாவதி பிரதமராகும் பட்சத்தில் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். ஈழத்தில் போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என நாங்களும் குரல் கொடுத்து வருகிறோம்.

- இவ்வாறு அக் கட்சியின் முதன்மை பொதுச்செயலாளர் சிவகாமி தெரிவித்துள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் கன்னியாகுமரி தொகுதி வேட்பாளராக நான் அறிவிக்கப்பட்டுள்ளேன்.

தேசியக் கட்சிகளின் ஆதிக்கம் மிகுந்த தொகுதியாக கன்னியாகுமரி உள்ளது. படித்தவர்கள் அதிகமுள்ள அம்மாவட்டத்தில் போட்டியிடுவதில் பெருமைப்படுகிறேன்.

ஜாதி, மதவாத அரசியலை வேரறுத்து எல்லோருக்கும், எல்லாமும் என்பதன் அடிப்படையில் பகுஜன் சமாஜ் தேசிய அளவில் காலூன்றி வருகிறது.

ஈழத்தில் போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என நாங்களும் குரல் கொடுத்து வருகிறோம்.

தேசிய அளவில் மாயாவதி பிரதமராகும் பட்சத்தில் ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

# இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்க இராணுவ உதவி அளிக்கிறது இந்தியா!

## வைகோவுக்கு பிரதமர் மன்மோகன் கடிதம்





இலங்கையில் நடக்கும் பிரச்சினை உள்நாட்டு விவகாரம். இலங்கையின் ஒருமைப்பாட்டை காக்க இந்திய அரசு இராணுவ உதவி செய்கிறது என்று பிரதமர் மன்மோகன் சிங், கடந்த ஒக்ரோபர் 2ஆம் திகதி எனக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

- இவ்வாறு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்றுமுன்தினம் சேலம் வந்திருந்த அவர், செய்தியாளர்களிடம் கூறுகையிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு இந்தியாதான் காரணம்.

இலங்கையில் தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்கும் நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும், மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசக்கூடாது என்றும் கூறியுள்ளன.

ஆனால் இந்திய அரசு இதுவரை ஏன் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தவில்லை. இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு இந்தியாதான் காரணம்.

பிரதமர் மன்மோகன் சிங், கடந்த ஒக்ரோபர் 2ஆம் திகதி எனக்கு எழுதியிருந்த கடிதத்தில், இலங்கையில் நடக்கும் பிரச்சினை உள்நாட்டு விவகாரம். இலங்கையின் ஒருமைப்பாட்டை காக்க இந்திய அரசு இராணுவ உதவி செய்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ உதவிகள் மட்டுமின்றி, பண உதவியும் இந்திய அரசு செய்து வருகிறது என்று கடிதமூலம் தெரிவித்திருந்தார் - என்றார்.

# உண்ணாவிரதம் இருந்ததால் இலங்கைக்கு மருந்துப்பொருள்களை அனுப்பினார்களா?

## ஜெயலலிதா சொல்வது நகைச்சுவையாக உள்ளது என்கிறார் கருணாநிதி

இலங்கையில் 2008ஆம் ஆண்டு போர் தீவிரமடைந்தபோது வேடிக்கை பார்த்த மத்திய அரசு, நான் இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று அறிந்தவுடன், அதேநாளில் இலங்கைத் தமிழர்களுக்கு 25 தொன் மருந்துகளையும், மருத்துவ உபகரணங்களையும் விமானம் மூலம் அனுப்பியுள்ளது என்று ஜெயலலிதா கூறியிருப்பது நல்ல நகைச்சுவையாக உள்ளது.

- இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்துஅவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு:-

ஜெயலலிதா உண்ணாவிரதம் இருக்கிறார் என்றவுடன், உடனடியாக 25 தொன் மருந்துகளையும், மருத்துவ உபகரணங்களையும் தயார் செய்து, விமானமும் ஏற்பாடு செய்து அன்றைய தினமே ஒரு அரசின் சார்பில் அனுப்புவது என்பது சாத்தியக் கூறான காரியமா? ஜெயலலிதா இவ்வாறு தன்னால்தான் என்று கூறிக் கொள்வது நல்ல நகைச்சுவையாக இல்லையா?

மத்திய அரசுதான் நேற்றுமுன்தினம் மருந்துப் பொருள்களை அனுப்பியது. தமிழக அரசின் சார்பில் ஜெயலலிதா தூங்கிக் கொண்டிருந்த நாள்களில் - 2008ஆம் ஆண்டு நவம்பர் திங்களிலேயே முதல் கட்டமாக 2,000 தொன் எடையுள்ள நிவாரணப் பொருள்கள் சுமார் 80 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்குவதற்காக தனித்தனியே சிப்பங்களாக அனுப்பி வைக்கப்பட்டதே, அதற்கெல்லாம் ஜெயலலிதாதான் காரணமா? இவர் மார்ச் 2009இல் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதற்கு பின்னர், உண்ணாவிரதம் இருப்பார் என்று தெரிந்து கொண்டு செய்யப்பட்ட காரியமா?

இந்த 2000 தொன் நிவாரணப் பொருள்களை அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்டு, கப்பலிலே செல்லக் காத்திருந்த நேரத்தில் நானே நேரில் சென்று இவைகளையெல்லாம் பார்த்தேன்.



இந்த நிவாரணப் பொருள்கள் 100 கொன்டெய்னர்களில் சுங்க அதிகாரிகளின் ஆய்வுக்குப் பின் ஏற்றப்பட்டு 13.11.2008 அன்று இரவு சென்னை துறைமுகத்திலிருந்து புறப்பட்டு, 15.11.2008 அன்று காலை 7 மணியளவில் கொழும்பு சென்றடைந்தது.

அந்தப் பொருள்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றன எனவும், தமிழர்கள் அதனைப் பெற்றுச் செல்கிறார்கள் என்றும் ஏடுகளில் எல்லாம் செய்தி வந்தபோது ஜெயலலிதா எந்த உலகத்திலே இருந்தார்?

ஏதோ இரண்டு இடங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக் கும் என்பதற்காக இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும், விடுதலைப் புலிகள் பற்றி ஜெயலலிதாவிற்கு நேர் எதிரான கொள்கையுடைய வைகோவும் அந்த உண்ணாவிரதத்தை வரவேற்று விட்டார்கள் என்றதும், உலகமே வரவேற்கிறதாம். நான் கதிகலங்கி விட்டேனாம். என் செய்வது? கதாநாயகி நடிகை காமெடி நடிகையாக ஆகிவிட்டார். கஷ்டகாலம்.

உண்டியல் மூலம் வசூலான நிதி அனைத்தும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு அளிக்கப்படும் என்று ஜெயலலிதா அறிக்கை விட்டிருக்கிறார்.

எப்படியோ போகட்டும். நாம் அரசின் சார்பாக தொகையாகக் கூட அல்ல, வரைவோலை மூலமாக நிதி திரட்டியபோது, அதனை ஏதோ என் குடும்ப நிதியில் சேர்த்துக் கொண்டேன் என அறிக்கை விட்டு விட்டு, தற்போது அவரே உண்டியல் வைத்து நிதி சேர்ப்பது முறைதானா என்று நாம் கேட்டிருந்தோம் - என்றுள்ளது.

# நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தில் ஈழ ஆதரவு பதாகைகளுக்குத் தடை!

## இந்திய தேர்தல் ஆணையம் அதிரடி அறிவிப்பு

இந்திய அரசியலில் பேரளவில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் ஈழப்பிரச்சினையை தேர்தல் பிரசாரத் துண்டறிக்கைகள், பதாகைகளில் பயன்படுத்த தடை விதித்து இந்தியத் தேர்தல் ஆணையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாவது இந்திய அரசியலில் ஈழ மக்களது பிரச்சினை பெரிதளவு பேசப்பட்டு வருகின்றது. ஈழ மக்களுக்கு ஆதரவாக தமிழ் மக்களிடத்தில் ஈழ மக்களின் நிலையை எடுத்துச்சொல்லும் வகையில் மனித நேயமிக்க அரசியல்கட்சிகளும் , அரசியல் சாரா அமைப்புகளும் துண்டறிக்கைகளையும் , சுவரொட்டிகளையும் , பதாகைகளையும் வைத்து மக்களிடத்தில் தமிழுணர்வை ஊட்டி வருகின்றனர்.

தமிழகத்தில் எழுந்துள்ள ஈழ ஆதரவானது தமிழகத்தில் மட்டுமல்லாது, இந்தியா முழுமைக்கும் ஒரு அரசியல் மாற்றத்தினை அமைக்கும் விடயமாக எழுச்சிபெற்றுள்ளது.

இந்த நிலையில், இவ் எழுச்சியை ஒடுக்கும் வகையில் ஈழம் சார்ந்த எவ்வித துண்டறிக்கைகளும், சுவரொட்டிகளும், பதாகைகளும் அச்சடிக்க கூடாது என்று அச்சகத்தினர்களுக்கு தேர்தல் ஆணையம் அறிக்கை அனுப்பியுள்ளது. மீறி அச்சடித்தால் அச்சகத்தினர் மேல் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யாருடன்? தி.மு.க. கூட்டணியில் தொடரும் குழப்பம்

சென்னை, மார்ச் 13

காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இன்னும் தி.மு.க. அணியில் நீடிக்கிறதா என்ற கேள்விக்கு தி.மு.க. தலைமை இதுவரை பதில் அளிக்காமல் மௌனம் காத்து வருகிறது.

இந்த நிலையில், தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ.தங்கபாலு செய்தியாளர்களை புதன்கிழமை சந்தித்தார்.

அப்போது, காங்கிரஸ் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் உள்ளதா என்ற கேள்விக்கு, காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா-காந்தியின் உருவப் படங்களை எரிப்போரும், கட்சித் தலைமைக்கு எதிராக இருப்பவர்களுக்கும் எங்கள் கூட்டணியில் இடம் இல்லை - என்றார்.

ஆனால், காங்கிரஸ் கட்சியின் இந்த வாதத்தை விடுதலைச் சிறுத்தைகள் ஏற்பதாக இல்லை. இதுகுறித்து அந்தக் கட்சி வட்டாரங்களில் கேட்டபோது, தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளோம். அண்மையில், முதல்வர் கருணாநிதியைச் சந்திக்கும்போது இதுபற்றி அவரிடம் பேசினோம். உங்களுக்கு (கருணாநிதிக்கு) [illegible] இருந்தால், கூட்டணியில் இருந்து [illegible] என்று கூறினோம் எனத் தெரிவிக்கப்பட்டது.

# பா.ஜ.க. மீண்டும் ஆட்சி பீடமேறினால் ஈழப் பிரச்சினைக்கு 100 நாள்களில் தீர்வு

## மாநிலத் தலைவர் இல. கணேசன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 13



மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இலங்கைப் பிரச்சினைக்கு 100 நாள்களில் தீர்வு காணப்படும் - என்று அக்கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் இல.கணேசன் கூறியுள்ளார்.

சென்னைஎம்ஜிஆர். நகரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நடைபெற்ற கட்சியின் பொதுக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

அடுத்த இரண்டு மாதங்களில் மத்தியில் பா.ஜ.க. ஆட்சிதான் அமையப்போகிறது. அப்படி அமைந்தால் இலங்கைப் பிரச்சினைக்கு 100 நாள்களில் தீர்வு காணப்படும்.

முதல்வர் கருணாநிதி எப்போதும் இந்து மதத்தையும் இந்துக்களையும் விமர்சித்து வருபவர். ராமரை குடிகாரர் என்றெல்லாம் அவர் விமர்சித்துள்ளார்.

தற்போது தேர்தல் வருகிறது. பிரசாரத்தில் ராமரை விமர்சிக்க அவர் தயாராக உள்ளாரா? அப்படிச் செய்தால் அவருக்கு எந்தத் தொகுதியிலும் வாக்குக் கிடைக்காது.

சோனியா காந்தி பிரதமர் பதவிக்கு ஆசைப்படுகிறார். கடந்த 2004இல் அவர் பிரதமராக முயன்றார். ஆனால் அப்துல் கலாம் அதைத் தடுத்துவிட்டார். இப்போது யாரும் தடுத்து விடக்கூடாது என்பதற்காகத்தான் ஊழல் குற்றச்சாட்டு உள்ள பிரதிபா பட்டீலை குடியரசுத் தலைவர் ஆக்கியுள்ளார்.

காங்கிரஸ் பின்னணி கொண்ட நவீன் சாவ்லா தேர்தல் ஆணையராக கொண்டுவரப்பட்டுள்ளார். சோனியாவைப் பிரதமராக்க திறமையாக காய் நகர்த்தப்படுகிறது. 60 ஆண்டுகள் கால அரசியல் வாழ்க்கையில் யாராலும் ஊழல் குற்றச்சாட்டு கூற முடியாதவர் அத்வானி.

அவர் பிரதமராக தமிழக மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். நல்ல வேட்பாளர் யார் நல்ல கட்சி எது என்று பார்த்து மக்கள் வாக்களிக்க வேண்டும். அத்வானி பிரதமரானால்தான் வாரிசு அரசியலுக்கு முடிவு கட்ட முடியும் - என்றார்.

பா.ஜ.க. மாநிலப் பொதுச் செயலர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், தென் சென்னை மாவட்டத் தலைவர் ஸ்ரீதரன் உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரேந்தர் ஷேவாக்கின் அதிரடி ஆட்டத்தை பந்துவீச்சாளர்களால் தடுக்க முடியவில்லை

## நியூஸிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி கவலை

ஹாமில்டன், மார்ச் 12


இந்திய அணியின் ஆரம்ப வீரரான வீரேந்தர் ஷேவாக்கின் அதிரடி ஆட்டத்தை நியூஸிலாந்து பந்துவீச்சாளர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதனால்தான் 4ஆவது ஒரு நாள் போட்டியிலும் தோல்வி ஏற்பட்டது என்று நியூஸிலாந்து அணித் தலைவர் டானியல் விக்டோரி தெரிவித்தார்.

டில்லியைச் சேர்ந்த வீரேந்தர் ஷேவாக் 75 பந்துகளைச் சந்தித்து 125 ஓட்டங்களை எடுத்து நியூஸிலாந்திற்கு எதிரான இந்த 4ஆவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தார்.

இந்திய அணிக்கு எதிரான 4ஆவது ஒரு நாள் போட்டியில் நியூஸிலாந்து அணி 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்த பிறகு, ஹமில்டன் நகரில் செய்தியாளர்களைச் சந்தித்த விக்டோரி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இந்தப் போட்டியில் இந்திய அணியின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. இதனை விவரிக்க வார்த்தைகள் இல்லை. எங்களது பந்து வீச்சாளர்களால் இந்திய துடுப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. முக்கியமாக ஷேவாக்கின் ஓட்டக்குவிப்பை எங்களது வீரர்களால் கட்டுப்படுத்தவே இயலவில்லை. இது தான் இரண்டு அணிகளுக்கும் உள்ள வித்தியாசம்.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் ஷேவாக்கின் ஆட்டம் மிகச் சிறப்பாக இருந்தது. மற்றைய போட்டிகளைவிட நாங்கள் நன்றாக பந்துவீசினோம். இருந்தாலும் ஷேவாக்கிற்கு முட்டுக்கட்டை போடமுடியவில்லை. அதே நேரம் எங்களது பந்து வீச்சும் ஒரே சீராக இல்லை. இது போன்ற சிறிய மைதானங்களில் பந்து வீச்சு ஒரு சீராக இருக்கவேண்டும் என்றும் டானியல் குறிப்பிட்டார்.



தாங்கள் இதுவரை சந்தித்த அணிகளில் தற்போதைய இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை தான் சிறந்ததா என்ற கேள்விக்கு நியூஸிலாந்து அணியின் அணித் தலைவர் விக்டோரி பதில் அளித்தார்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. ஆனால் நான் இதுவரை சந்தித்த அணிகளில் இது தான் சிறந்த துடுப்பாட்ட வரிசை என்று உறுதியாகக் கூறமுடியாது. இந்திய அணியின் முதல் நான்கு வீரர்கள் வெகு நேர்த்தியாக துடுப்பாட்டம் செய்கிறார்கள். இவர்கள் நல்ல ஆரம்பத்தை அளிப்பதால் பின்னர் வரும் வீரர்கள் நிதானமாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கின்றனர் என்றும் டானியல் தெரிவித்தார். இதில் ஷேவாக் முக்கிய பங்கு வகிக்கிறார். இவரது அதிரடி ஆட்டத்தால் எதிரணி வீரர்கள் நிலை குலைந்து போகிறார்கள். மற்ற வீரர்கள் அவரைச் சுற்றி ஆடுகிறார்கள். ஷேவாக் நன்றாக ஆடத்தொடங்கிவிட்டால் அவரைத் தடுத்து நிறுத்த எதிரணியினர் கடினமாகப் போரட வேண்டியிருக்கும் . எனவே அவரது விக்கெட்டைக் கைப்பற்றுவது தான் முக்கியமாகும் என்றும் விக்டோரி கூறினார்.

# மேலும் ஒரு இந்திய வீரர் தென்னாபிரிக்க அணியில்

டர்பன், மார்ச் 13

தென்னாபிரிக்க அணியில் மேலும் ஒரு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வீரர் சேர்க்கப்பட்டுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ள தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணித் தலைவர் ஸ்மித் காயம் காரணமாக அணியிலிருந்து விலகியுள்ள நிலையில், இளம் வீரரான இம்ரான்கான் என்பவர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இம்ரான்கான் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே அசிம் ஆம்லா எனும் இந்திய வம்சாவளி வீரர் தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்றுள்ளார். தற்போது இம்ரான்கான் அணியில் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

# சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட்டை தென்னாபிரிக்காவில் நடத்த முடிவு?

டுபாய், மார்ச்13

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி வருகின்ற செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதத்தில் தென்னாபிரிக்காவில் நடைபெறவிருக்கிறது.

சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தானில் நடத்தத் திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் அங்கு பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்று அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் விளையாட மறுத்ததால் இந்தப் போட்டி தள்ளி வைக்கப்பட்டது.

இந்தப் போட்டி மாற்று இடமான இலங்கையில் இந்த ஆண்டு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் போட்டி நடைபெறும் கால கட்டத்தில் இலங்கையில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால் சம்பியன்ஸ் கோப்பைப் போட்டி தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில்(ஐ.சி.சி) தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், இலங்கையில் போட்டியை நடத்த தட்பவெப்ப நிலை ஒத்து வராததால் சம்பியன்ஸ் கோப்பை போட்டியை தென்னாபிரிக்காவுக்கு மாற்றப் பரிந்துரைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இது




குறித்த முடிவு வருகின்ற 16ஆம் திகதி நடைபெறும் ஐ.சி.சி. நிர்வாக குழு கூட்டத்தில் எடுக்கப்படும்.

ருவென்ரி 20 போட்டியை சிறப்பாக நடத்தியதாலும், தென்னாபிரிக்காவில் செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதத் தில் தட்பவெப்ப நிலை சீராக இருக்கும் என்பதாலும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஐ.சி.சி. தலைமை செயல் அதிகாரி ஹாரூன் லார்கட் தெரிவித்துள்ளார். போட்டி செப்ரெம்பர் 24ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 5ஆம் திகதி வரை 12 நாட்கள் நடைபெறும்.

அடுத்த ஆண்டு (2010) மேற்கிந்தியத் தீவுகளில் ஏப்ரல் 23ஆம் திகதி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ள ருவென்ரி 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை ஒரு வாரம் தாமதமாக ஏப்ரல் 30ஆம் திகதி தொடங்குவது என்றும் ஐ.சி.சி. தலைமை செயற்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்படவிருக்கிறது.

# பாதுகாப்பு ஏற்பாட்டில் எந்தக் குறையும் இல்லை

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவிப்பு

இலங்கை அணிக்கு எதிரான தொடரில் பாதுகாப்பு ஏற்பாட்டில் எந்தவிதக் குறையும் இருக்கவில்லை என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. லாகூரில் இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்தத் தாக்குதலுக்கு பாதுகாப்பு ஏற்பாட்டில் இருந்த குறைகளே காரணம் என்று குற்றம் சாட்டப்பட்டது. குறிப்பாக போட்டிநடுவர் கிறிஸ் பிராடு, லாகூர் மைதானத் தில் செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற் பாடுகளை குறை கூறியிருந்தார். இதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கண்டனம்தெரிவித்தது.

## பெண்களுக்கான உலகக் கோப்பைத் தொடரில்

# நேற்று நடந்த பாகிஸ்தானுடனான தொடரிலும் வென்றது இங்கிலாந்து



நேற்று நடந்த ஆட்டத்தில் இங்கிலாந்து வீராங்கனைகள் விக்கெட் வீழ்த்திய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதை முதல் படத்திலும் இங்கிலாந்து வீராங்கனைகளின் அதிரடி ஆட்டங்களை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

சிட்னி, மார்ச் 13

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான உலகக் கோப்பைத் தொடரில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்து 78 ஓட்டங்களை (39.5 ஓவர்கள்) மட்டுமே பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்த இலக்கை நேக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 82 ஓட்டங்களை (23.1 ஓவர்கள்) எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றிபெற்றது.

# பாதுகாப்புச் சபைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் உறுப்பினர்களின் அவசரகடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையின் வடபகுதியில் காணப்படும் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடி குறித்து ஆழ்ந்த கவலையுடன் இந்தக் கடிதத்தை எழுதுகிறோம்.

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் 2 லட்சம் மக்கள் சிக்கியுள்ளனர் என மனித உரிமை அமைப்புகள் மூலம் அறியக் கிடைத்துள்ளது.

அங்குள்ள பலர் பல வாரகாலமாக வெளியிலிருந்து கிடைக்கும் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் கிடைக்கப் பெறாத நிலையில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

யுத்தம் மற்றும் மனிதாபிமான தேவைகள் இன்மை காரணமாக அவர்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் பாரதூரத் தன்மையைக் கருத்திற்கொண்டு நீங்கள் உடன் இலங்கை ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு, வன்னிப் பகுதியில் சிக்கியுள்ள சகல பொதுமக்களுக்கும் பாதுகாப்பை வழங்குமாறும், மனிதாபிமான விநியோகங்களுக்கு ஐக்கிய நாடுகளின் அமைப்புகளை அனுமதிக்குமாறும் கோரிக்கைவிடவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் தமிழ் மக்கள் தேசிய ரீதியில் அர்த்தபூர்வமான பங்களிப்பைச் செய்வதற்கும், அவர்களுக்கு எதிரான பாரபட்சங்களுக்கு முடிவு காண்பதற்குமாக அரசியல் தீர்வை காண்பதில் முன்னேற்றம் காணப்படுவதற்கு முயலவேண்டுமெனக் கோரவேண்டும்.

### அரசியல் தீர்வை நோக்கி முன்னேற்றம் தேவை

இந்த முக்கியமான தருணத்தில் உங்களது செயற்துடிப்பு மிக்க தலைமைத்துவத்தால் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காக்கலாம். மேலும் இவ்வகையில் பயங்கரமான தொடர் வழிமுறைகளை முடிவிற்குக் கொண்டுவரும் அரசியல் தீர்வை நோக்கி முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.

பொதுமக்களுக்கு எதிராக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் வன்முறைகளையும் கண்டிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மோதலுடன் தொடர்புபடாதவர்கள் சுதந்திரமாக நடமாடவும் மனிதாபிமான விநியோகங்களைப் பெற்றுக்கொள்ளவும் இருதரப்புகளும் மனிதாபிமான வழிவகையொன்றை உ[illegible]க்கவேண்டும்.

ஐக்கிய [illegible]ளும் மனிதாபிமானப் பணியாளர்களும், பத்திரிகையாளர்களும், மனித உரிமைக் கண்காணிப்பாளர்களும் மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். இதனை வெகு விரைவில் சாத்தியமாக்க வேண்டும்.

பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துமாறு நீங்கள் வற்புறுத்த வேண்டும்.

### இடைத்தங்கல் முகாம்கள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை

மோதல் நடைபெறும் பகுதிகளில் இருந்து மக்களுக்காக இலங்கை அரசு அமைத்துள்ள இடைத்தங்கல் முகாம்களும் மேலும் எமது கவலைக்குரிய விடயமாகும்.

இந்த முகாம்கள் அங்குள்ள மக்களின் மனிதாபிமான தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமானவையல்ல.

தற்போது ஆயுதக்குழுக்கள் அந்த முகாம்களுக்குள் இயங்குகின்றன. பல பெண்கள், ஆண்கள், குழந்தைகள் தாக்கப்பட்டுள்ளனர். பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். காணாமல் போயுள்ளனர் என மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த முகாம்களில் உள்ள மக்கள் தாங்க[illegible] இடத்தில் இருப்பதற்கான உரிமை வழங்கப்பட வேண்டும். மேலும் அவர்கள் சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும்.

இந்த மக்கள் மோதல் நடைபெறும் பகுதியிலிருந்து வெளியேறுவதில் செஞ்சிலுவைக்குழு முக்கிய பங்காற்ற வேண்டும். அதேவேளை, இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் ஐக்கிய நாடுகள் பங்களிப்புச் செய்யவேண்டும்.

ஐக்கிய நாடுகளை இந்தப் பணியை ஆற்றுமாறும் இலங்கை அரசை இதற்கு அனுமதிக்குமாறும் நீங்கள் வற்புறுத்த வேண்டும்.

பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சிநிரலில் இலங்கை விவகாரத்தை இடம்பெறச் செய்வதற்காக ஏனைய உறுப்பு நாடுகளுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இனக் கொலை அபாயம் உள்ள 8 நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றிருப்பதை உங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

இனக்கொலை தொடர்பான சட்ட வியாக்கியானங்கள் குறித்து சிலர் விவாதிக்கலாம். எனினும் இனஅடிப்படையிலான வன்முறை பரந்துபட்ட அளவில் இலங்கையில் இடம்பெறுகின்றது. இதே வேளை மோதலுடன் தொடர்புபடாத தமிழர்கள் இலங்கை அரச கொள்கையால் வேண்டுமென்று பாதிக்கப்படுகின்றனர் என்பதில் சந்தேகமில்லை - என்றுள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனை எதுவுமற்ற உதவிகளையே சர்வதேச நாணய நிதியம் வழங்குகிறது

## கடன் கேட்பதால் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது என்று கூறமுடியாதாம்

கொழும்பு, மார்ச் 13

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி வழங்குவதற்கு நிபந்தனைகள் எவற்றையும் விதிக்கவில்லை என்று ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நேற்று கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு :-

இலங்கை அரசு 19 ஆயிரம் கோடி ரூபாவை சர்வதேச நாணய நிதியத்திடம் கடனாகக் கோரியமையினால் இலங்கை பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவரது ஆட்சிக் காலத்தில் அவர் வகுத்த பொருளாதாரத் திட்டங்கள் வெற்றியளித்திருந்தால் இன்று இந்த நாடு மிஞ்சியிருக்காது. அமெரிக்காவை ஒத்த பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுக்க அவர் முற்பட்டார். இன்று உலகில் அதிகளவில் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருப்பது அமெரிக்காதான்.

அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளபோதிலும் எமது நாட்டின் பொருளாதாரம் உறுதியாகவே உள்ளது. வெளிநாடுகளிடம் நாம் கடன் கோருவதால் நாம் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து வருகின்றோம் என்று சொல்லமுடியாது.

எமக்கு நிதி வழங்குவதற்கு சர்வதேச நாணயம் நிபந்தனைகளை விதித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

உலகில் நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதன் காரணத்தால் சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளைத் தளர்த்தவில்லை. அந்தவகையில் நாணய நிதியம் எமக்கு நிபந்தனை எதையும் விதிக்கவில்லை - என்றார். (அ-சி)

### முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றப்படாவிட்டால் அவர்கள் பூண்டோடு அழியும் பேரபாய நிலை உள்ளது. இந்த நிலை ஆபத்தானது என்பதால் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய விரைவான, கண்டிப்பான, உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-

அந்தரித்து பரிதவிக்கும் மக்கள், சிக்குண்டுள்ள மக்கள் பாதுகாப்பான இடத்துக்குச் செல்வதற்கு, கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதற்கு இருதரப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்ய வேண்டும் -என்று கடிதத்தில் கேட்டுள்ளார். (அ-1)

### முல்லைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டது. அதன் பின்னர் நேற்று எஞ்சிய 355 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களும் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு இறக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரை விடுவிக்கப்படாத பகுதிக்கு கடந்த இரண்டரை வாரங்களில் மொத்தம் 750 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே அனுப்பி உள்ளதாகவும் அதன் பொருட்டு உலக உணவுத்திட்டம் உதவி வழங்கியதாகவும் அமைச்சர் கூறினார்.

இதேவேளை, இவ்வருட முற்பகுதி தொடக்கம் 39 ஆயிரம் பொதுமக்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்துள்ளதாகவும் பெப்ரவரி 10 ஆம் திகதி தொடக்கம் இம்மாதம் 6 ஆம் திகதி வரை 2,224 நோயாளிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் அழைத்து வரப்பட்டு 7 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

### புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்குள் வந்தது எனப் படைத்தரப்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இராணுவத்தினர் வைத்தியசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் படைத்தரப்பு வெளியிட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-சி)

### பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், இரு தரப்பையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதிக்குமாறும் மோதல் நடைபெறும் பகுதி, பாதுகாப்பு வலயப் பகுதி ஆகியவற்றில் உள்ள மக்களைப் பாதுகாக்குமாறும் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

சர்வதேச மற்றும் உள்ளூர் மனித உரிமை அமைப்புகள், ஊடகவியலாளர்கள் ஆகியோரை மோதல் இடம்பெறும் பகுதிகள், முகாம்களுக்குச் செல்ல முழுமையாக அனுமதிக்க வேண்டும் என இலங்கை அரசை ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுள்ளது.

அதேவேளை, பொதுமக்கள் வெளியேறுவதற்கு உதவ முன்வந்துள்ள நாடுகள், மனிதாபிமான அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், மோதல் இடம்பெறும் பகுதிகளிலிருந்து மக்கள் சுதந்திரமாக வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் தடை ஏற்படுத்துகின்றனர் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியிருக்கிறது. (சி)

# கு கடலில் வெளியிணைப்பு இயந்திரம் பூட்டி தொ ல் செய்ய மீனவர்களுக்கு புதன் முதல் அனுமதி மறுப்பு

வண்ணை, மார்ச் 13

யா குடாக்கடல் நீரேரியில் வள்ளங்களில் வெளியிணைப்பு இயந்திரங்கள் பூட்டி செல்வதைப் படையினர் மறு அறிவித்தல் வரை தடை செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் புதன்கிழமையில் இருந்து இந்த தடை அமுல்படுத்தப்பட்டு வருவதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மீனவர்கள் கடற்தொழிலுக்கு பாய் வள்ளங்களிலும், மரக்கோல் கொண்டு தாங்கிச் செல்லும் வள்ளங்களிலுமே தொழில் செய்து வருகின்றனர்.

இதே வேளை, பாலைதீவு போன்ற தூர இடங்களுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் கடந்த திங்கட்கிழமை போய் வந்த பின்னர் அந்தக் கடற் பகுதிக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-160)

# மன்னார்ப் பகுதிக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதி இல்லை

கொழும்பு, மார்ச் 13

மன்னார் மாவட்டத்தில் கடந்த 5 நாள்களாகப் படையினர் மீனவர்களைத் தொழிலுக்குச் செல்ல அனுமதி மறுத்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. மன்னார் பள்ளிமுனை, கோந்தைப்பிட்டி, சௌத்பார், சிறுத்தோப்பு, வங்காலைப்பாடு ஆகிய இறங்குதுறைமுகப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்பவர்களையே இவ்வாறு கடற்படையினர் தடுத்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இதனால் சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. மீனவர்களைத் தொழிலுக்குச் செல்லவிடாது தடுத்து வருவதால், மன்னாரில் கடலுணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கடல் மார்க்கமாகத் தொடர்ச்சியாகப் படையினரை வன்னிப் பகுதிக்கு ஏற்றி இறக்கும் சேவைகள் இடம்பெற்று வருவதாலேயே மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது எனவும் கூறப்படுகின்றது. (அ-சி)

### உடையார்கட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளம் தெரிவித்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி முல்லைத்தீவு உடையார்கட்டுப் பிரதேசத்தில் இரசாயன ஆயுத உபகரணங்கள் மீட்கப்பட்டன என்றும் அதனால் விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தும் சாத்தியம் உள்ளது என்றும் அந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-6)

### வன்னிமக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்கு அமெரிக்க பசுபிக் கட்டளை பீடத்தின் கடற்படை, விமானப்படையினர் சென்று மக்களை வெளியேற்றத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இவ்வாறான வெளியேற்றம் சாத்தியமா என்பதை ஆராய்வதற்கு இப்பகுதிக்குச் சென்றுள்ள அமெரிக்க குழு, தற்போதைய நிலையில் இது சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளது.

இரு தரப்புகளும் பரஸ்பரம் தாக்குதலை மேற்கொள்ளாத நிலை, இருதரப்பும் இதற்கு இணங்காத சூழ்நிலையில் மக்களை வெளியேற்றுவதற்கான திட்டம் சாத்தியப்படமாட்டாது என வாஷிங்ரன் வட்டாரம் தெரிவிக்கிறது.

இரு தரப்பும் பரஸ்பரம் தாக்குதலை மேற்கொள்ளாது மற்றும் இருதரப்பும் இணங்கும் பட்சத்திலேயே இதனை நடைமுறைப்படுத்த முடியும்.

மேலும் இவ்வாறு வெளியேற்றப்படுபவர்களை எங்கு கூட்டிச் செல்வது என்பது பிரச்சினைக்குரிய விடயமாகக் காணப்பட்டது. அவர்களைத் தமிழ்நாட்டிற்கு கூட்டிச் செல்வது பற்றியும் ஆராயப்பட்டது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

### படுகொலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து கூர்ந்து அவதானித்து வருவதாக அல்லடன் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியில் இடம்பெயர்ந்து அல்லலுறும் பொதுமக்களை பாதுகாப்பது அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய கடமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்துள்ளார்.

இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்த குற்றச் செயல்கள் குறித்து தமது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


விசேட சலுகை
இன்று முதல் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் 4R அளவிலான புகைப்படப் பிரதி ஒன்று 10ரூபா மட்டுமே.
மூர்த்தி டிஜிற்றல் கலர் சொப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, நெல்லியடி.

கணனியில் சர்வதேச சான்றிதழ்
ICDL e-CITIZEN
வடமாகாணத்தில் ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையம்
விபரங்களிற்கு
STP Your Partner in IT Solutions
149, Kasthuriar Road. Jaffna.T.P:0212222674.

இதோ உங்களுக்காக...!
MOTHER BOARD: MSI - 5,500/= Foxconn - 5,600/= Biostar - 5,900/= Intel G31- 7,700/=
LCD MONITOR: 17" LCD Monitor - 16,500/= 19" LCD Monitor - 19,500/= 22" LCD Monitor - 31,000/=
PROCESSOR: Intel 1.8Ghz celeron - 4,750/= Intel 1.8Ghz Dualcore - 7,500/= Intel 2.0Ghz Dualcore - 8,400/=
DVD WRITER: LG - 3,100/= Samsung - 3,400/= Asus - 3,900/= Sony - 4,000/=
VGA CARD: Agp 128MB Nvidia - 4,500/= 512MB Pci Express - 7,500/= (Asus/Geforce) Geforce 1GB - 12,500/=
HARD DISK: 40GB Sata - 4,500/= 80GB Sata - 4,700/= 160GB Sata - 5,000/= 250GB Sata - 6,100/=
TONER: 12A - 5,200/= 92A - 5,200/= 49A - 5,200/+ 13A - 5,300/=
ACCESSORIES: Hp Laserjer - 13,750/= Epson LQ300+II - 21,500/= ATX HandleCasing(500W) - 4,250/= Pendrive Capturecard - 7,900/= Power Supply - 1,750/= Web Camara - 1,400/= Card Reader - 700/= 56K Modem - 700/= LGA Processor Fan - 1,100/= Optical Mouse - 500/= Sound Card - 950/= Tv Card - 2,900/=
PORTABLE HARD DISK: 160GB usb Power - 9,900/= 250GB usb Power - 11,900/= 320GB usb Power - 13,900/=
PEN DRIVE: 1GB - 650/= 2GB - 850/= 4GB - 1,150/= 8GB - 1,950/=
RAM: Kingston 1GB DDR11 - 1,750/= Kingston 2GB DDR11 - 3,200/= Kingston 512MB DDR1 - 3,100/= SD Ram 128MB - 900/= SD Ram 256MB - 1,600/=
MP3 PLAYER: 1GB 2,500/= 2GB 3,000/=
SONY MP3 PENDRIVE: * 1GB * FM Radio * Pendrive * Head Phone * MP3 * External Micro SD * Voice Recording Solt 4,250/=
MP4 PLAYERS: *2GB (Expand 2 GB) *Camara * FM Radio *MP3 *Games *Voice Recording *USB Cable *Power Charger *Head Phone *Driver CD 8,500/=
SONY MP4 & MP3: *2GB * FM Radio *MP3 *Games *VoiceRecording *USB Cable *Head Phone 6,000/=
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

தொழிற் பயிற்சிகள்
* Mobile Phone Repairing
Hard Ware, Hard Ware Repairing, Soft Ware, Phone Lock காலம்: 2மாதம்
* றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
றேடியோ, CD Player, DVD, ரெலிவிசன், AMP, UPS ஆகியன திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 9மாதம்
* ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர்கொண்டிசன் திருத்து முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 6மாதம்
பயிற்சிகள் ஆரம்பம்: 15.03.2009, 16.03.2009
Jaffna Technical Institute
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். Tel: 0779254078

கணக்கீடு
A/L 2010 பங்குடமை முடிவுக் கணக்கு ஆரம்பம் நாளை 4p.m
A/L 2009 நிரயக்கணக்கீடு நாளை 5pm
A/L 2009 Day Class Paper Class பங்குடமை செவ்வாய் - 6.15am
S.தவா B.Com (Hons) (Acc.spl)
Universal யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்

கணக்கீடு
A/L 2009 Day Class Paper Class பங்குடமை சனி,ஞாயிறு 12 மணி
A/L 2010 பங்குடமை முடிவுக் கணக்கு ஆரம்பம் ஞாயிறு 2 p.m
S.தவா B.Com (Hons) (Acc.spl)
NEW SCIENCE HALL JAFFNA.

Trinity College & University
Coordinating Office
Manipay
B.Sc(Hons) in Computer Science
பட்டப்படிப்புக்கள் 14/03/2009 அன்று புதிய பிரிவுகள் (Batch - II) ஆரம்பமாகின்றன.
எமது இப்பட்டப்படிப்பினை நீங்கள் நிறைவு செய்த பின்னர் M.Sc in IT பட்டப்படிப்பினை UK,USA,CANADA,INDIA ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தொடரமுடியும்.
G.C.E (O/L) or A/L பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இப்பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும்.
(பரீட்சைகள் அனைத்தும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்)
Trinity College & University has an honor to be appointed as a "Career Development Training Provider" by the British Government. The Degrees are fully acceptable for all Governments of UK, EU, Norway & Iceland Wide reference No 57255 of Individual Learning Account (ILA)
விண்ணப்பபடிவங்களுக்கும் மேலதிக விபரங்கட்கும் :-
UNI TECHNOLOGY
Degree Division
Manipay
T.P :- 060 221 6433


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org